வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 05 | 25.11.2023 சனிக்கிழமை | இதழ் : 349 | பக்கங்கள் : 12

## கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி வீதிக்கு குறுக்காக செல்லும் சாத்தியம்

### விசேட சட்ட மருத்துவ அதிகாரி



முல்லைத்தீவு, நவ. 25
கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியானது வீதியின் ஊடாகவும் ஏனைய பகுதிகள் ஊடாகவும் செல்லக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. என முல்லைத்தீவு மாவட்ட விசேட சட்ட மருத்துவ அதிகாரி

11

## மாவீரர் தினத்தை சட்டவிரோதமாக அனுஷ்டிப்போர் மீது சட்டம் பாயும்!

### மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பொலிஸ்மா அதிபர் உறுதிமொழி

கொழும்பு, நவ. 25
எதிர்வரும் நாட்களில் வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகள் அமைப்பின் மாவீரர் தினத்தை சட்டவிரோதமாக அனுஷ்டிப்பவர்கள் தொடர்பில் பொதுச் சட்டம் மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதாக பொலிஸ் மா அதிபர் மற்றும் பயங்கரவாத விசாரணை பணியகத்தின் பணிப்பாளர் ஆகியோர் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றில் உறுதியளித்துள்ளனர்.

11

## மனித புதைகுழியில் நேற்றும் நான்கு மனித எச்சங்கள் மீட்பு



முல்லைத்தீவு, நவ. 25
முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியில் நேற்று மேலும் நான்கு மனித எச்சங்களும் துப்பாக்கிச் சன்னங்களும் மீட்கப்பட்டுள்ளன.
கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியின் அகழ்வு பணியானது மீள ஆரம்பிக்கப்பட்டு நேற்று ஐந்தாவது நாளாக தொடர்ந்து நடைபெற்று

11

## 2ஆம் கட்ட கடனுக்கு டிசெம்பரில் அனுமதி

கொழும்பு, நவ. 25
சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தவணைக் கடனுக்கு அடுத்த மாதம் அனுமதி கிடைக்கும் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க உறுதியளித்துள்ளார்.
நாணய சபை மீளாய்வு கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் இதனை

11

## சித்தன்கேணி இளைஞர் கொலை;

# ஐந்து பொலிஸாரை உடன் கைது செய்க!

### யாழ். நீதிமன்றம் நேற்று உத்தரவு

யாழ்ப்பாணம், நவம்பர் 25
சித்தன்கேணி இளைஞர் நாகராசா அலெக்ஸின் மரணம் மனித உயிர் போக்கலே என்ற முடிவுக்கு வந்த யாழ். நீதிவான் நீதிமன்று சம்பவத்துடன் தொடர்புடைய 5 பொலிஸாரை உடன் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு நேற்று உத்தரவிட்டுள்ளது.



## மாவீரர் நினைவேந்தலுக்கு தேவையான பொருள்கள் சேகரிப்பதற்கு விசேட கூடம்!

### யாழ். பல்கலை மாணவர்கள் ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ. 25
மாவீரர் தினத்தில் தமிழ் மக்களின் கூட்டுணர்வையும் கூட்டுரிமையையும் வெளிப்படுத்தும் வகையில் நினைவேந்தலுக்கு தேவையான பொருட்களை சேகரிப்பதற்கான கூடம் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களால் அமைக்கப்பட்டுள்ளது.

11




## "மீற்றர் வட்டிக்காரனை விட மோசமாக மக்களை சுரண்டும் மின்சார கட்டணம்"

கொழும்பு, நவ. 25
மின்சாரம் தயாரிக்கும் செலவை விட 12 மடங்கு அதிக விலைக்கு மின்சார சபை மக்களுக்கு மின்சாரத்தை விற்பனை செய்வதாக பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.
ஒரு மீற்றர் வட்டிக்காரன் கூட இவ்வாறான செயல்களை செய்யமாட்டான் என கம்மன்பில குறிப்பிட்டார்.
கடந்த காலத்

11

## நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்கும் யோசனையில் கையெழுத்திடவில்லை

### சபையில் குறிப்பிட்டார் ஜனாதிபதி

கொழும்பு, நவ. 25
நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இல்லாது செய்யும் எந்தவொரு யோசனையிலும் தான் கைச்சாத்திடவில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
பாராளுமன்றில் நேற்று ஆற்றிய விசேட உரையின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

11

## நிகழ்நிலை காப்பு, ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் சட்டமூலங்கள் சர்வதேசத் தரத்தில் இல்லை!

### ஐ. நா. அறிக்கையில் சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 25
ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டமூலம் மற்றும் உத்தேச நிகழ்நிலை காப்பு சட்டமூலம் என்பன தொடர்பில் அதீத கவனம் செலுத்தப்பட்டு ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதிகள் மூவரால் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.
இந்த இரு சட்டமூலங்களும் சர்வதேச தரங்கள் மற்றும் சட்டத்திற்கு இணங்கவில்லை என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.
ஐக்கிய நாடுகள் சபையின் கருத்து வெளியிடுவதற்கான சுதந்திரத்தின் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டுக்கான விசேட பிரதிநிதி ஐரின் கான், அமைதியான முறையில் ஒன்றுகூடுதல் மற்றும்

11

## இப்படியும் நடக்கிறது

தெற்கில் அரசியல் கட்சிகளின் ஆதரவுத்தளம் குறித்து அவ்வப்போது சிலர் கருத்துக்கணிப்புகளை நடத்தினர் எனவும் அதன் பெறுபேறுகள் என்றும் சில தகவல்களை வெளியிட்டு வருகின்றனர்.

இதுபோன்ற கருத்துக் கணிப்புகள் எப்படி எடுக்கப்படுகின்றன என்ற சந்தேகத்தை முன்னரும் ஒரு தடவை இந்தப் பத்தியில் எழுதியிருந்தேன்.

கருத்துக்கணிப்புகள் என்பது பொது இடங்களிலோ அல்லது வீடுவீடாகச் சென்றோ எடுக்கப்படுவது உண்டு. அதுபோன்ற கருத்துக்கணிப்புகள் எடுக்கப்பட்டதாக இதுவரை யாரும் யாரிடமும் பகிர்ந்து கொண்டதாகவும் இல்லை. ஆனால், அவ்வப்போது சிலர் தாம் கருத்துக்கணிப்புகளை நடத்தியதாகக் கூறி முடிவுகளை வெளியிட்டு வருகின்றனர்.

அவ்வாறு கருத்துக் கணிப்புகளை செய்கின்ற அரச சாரா நிறுவனங்கள் பல மேற்குலக நாடுகளின் நிதிப் பங்களிப்பில் இயங்குபவை என்பதும் ஒன்றும் இரகசியமானவை அல்ல. அவ்வாறு மேற்குலகின் நிதிப் பங்களிப்பில் இயங்கும் இதுபோன்ற நிறுவனங்களின் கருத்துக் கணிப்பு முடிவுகள் என்று அறிவிக்கப்படுகின்ற தரவுகளை வைத்துக்கொண்டு தெற்கில் அரசியல் கட்சிகளிடையே நடக்கும் பேரம் பேசல்களை அறிகின்றபோது அவற்றின் நோக்கம் குறித்து சந்தேகங்கள் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

பிரான்ஸ் நாட்டில் நடக்கும் ஜனாதிபதி தேர்தலில் பல கட்சிகளையும் சேர்ந்தவர்கள் போட்டியிடுவார்கள். தீவிர இடதுசாரிகள், தீவிர வலதுசாரிகள், லிபரல்வாதிகள், இரண்டும் கெட்டான்களாக நடுவில் நிற்பவர்கள் என்று பல்வேறு தரப்பினரும் போட்டியிடுவார்கள். கடந்த பல தேர்தல்களில் தீவிர வலதுசாரியும் பிரான்ஸ்- பிரெஞ்சு மக்களுக்கானது என்ற கடும் தேசியவாதியுமான லு பென் என்ற தீவிர வலதுசாரியே அதிக வாக்குகளைப் பெற்று முதலிடத்திற்கு வருவார். ஆனாலும் அவர் பெற்ற வாக்குகள் ஐம்பது வீதத்திற்கு அதிகமாக வராது.

இதனால் இரண்டாம் கட்ட வாக்களிப்பு அங்கு நடைபெறும். அதில் முதல் இரண்டு இடங்களைப் பெற்றவர்கள் மட்டுமே போட்டியிடுவார்கள். அவ்வாறு போட்டியிடுகின்றபோது, தீவிர வலதுசாரி ஆட்சிக்கு வந்துவிடக்கூடாது என்று விரும்புகின்ற இடதுசாரிகள், சோசலிஸ்ட்டுகள் மட்டுமன்றி வலதுசாரிகளும்கூட அனைவரும் இணைந்து இரண்டாவதாக வந்த வேட்பாளரை வெற்றிபெறச் செய்துவிடுவார்கள். இதனால்தான் வலதும் இல்லாமல் இடதும் இல்லாமல் மத்தியில் நிற்கும் மக்ரோன் பிரான்ஸில் கடந்த இரண்டு தேர்தல்களிலும் வெற்றிபெற முடிந்தது.

பிரான்ஸில் இந்தத் தேர்தல் 'போர்முலா'வையே இப்போது இலங்கையிலும் ஏதோ ஒருவகையில் நடைமுறைப்படுத்த சிலர் முயன்று வருகின்றனர் என்று தெரியவருகின்றது.

கடைசியாகக் கிடைத்த கருத்துக்கணிப்பு ஒன்றில் ஜே. வி. பியின் தலைவர் அநுரகுமாரவுக்கே மக்கள் ஆதரவு அதிகமாக இருப்பதாகவும் (அதுவும் இருபத்தி ஐந்து வீதத்திற்கும் குறைவானதுதான் என்பது வேறு விடயம்) மற்றவர்கள் அனைவரும் அதனைவிட குறைவான வீதமான மக்கள் ஆதரவையே பெற்றிருப்பதாகவும் ஒரு கருத்துக்கணிப்பு வெளியிடப்பட்டது. அதுவும் மேற்குலக ஆதரவு அமைப்பால்தான் நடத்தப்பட்டது என்பதும் கவனிக்கத்தக்கது.

அந்தக் கருத்துக்கணிப்பை வைத்துக்கொண்டு பிரதான போட்டியாளர்கள் பலரையும் வழிக்குக் கொண்டுவரும் முயற்சியில் சிலர் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றனர் என்று கொழும்பு செய்தி ஒன்று தெரிவித்தது.

அடுத்த ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து நீண்டகாலமாக காய் நகர்த்தி வரும் சிலரை ஜே. வி. பியின் வெற்றியைத் தடுப்பதற்காக மற்றையவர்கள் எல்லோரும் ஒன்றிணைய வேண்டும் என்ற கோணத்தில் அனைவரையும் ஓரணியாகக் கொண்டு வருவதற்கான முயற்சியில் சிலர் ஈடுபட்டிருக்கின்றனராம்.

ரணில் - மகிந்த அணிக்கு எதிராக பொதுவேட்பாளர் ஒருவர் களம் இறக்கப்பட்டால் அதனை தனக்கு சாதகமாக பயன்படுத்தலாம் என்று நினைத்துக்கொண்டிருந்த சம்பிக்க ரணவக்க, இப்போது ரணிலை வேட்பாளராக்க - அவர் பின்னால் அணிதிரள சம்மதித்திருக்கிறார் என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள். அடுத்த வாரம் சுற்றுச்சூழல் தொடர்பான சர்வதேச மாநாட்டில் கலந்து கொள்ளச் செல்லும் ஜனாதிபதியுடன் சம்பிக்கவும் செல்லவிருக்கிறார். இதன்மூலம் அவர்கள் இருவரும் எதிர்வரும் தேர்தலில் ஒன்றாகப் பயணிக்கவிருப்பது உறுதியாகி இருக்கின்றது.

இதேபோல சஜித் பிரேமதாஸவையும் ரணிலின் பின்னால் அணிதிரள வைக்க கடும் முயற்சி நடப்பதாகவும் பிரதமர் பதவி வழங்கப்பட்டால் அதனை தான் சாதகமாகப் பரிசீலிக்கலாம் என்றும் அவரும் பச்சைக் கொடி காட்டியிருக்கிறார் என்றும் கொழும்பில் பரவலாக பேசப்படுகின்றது.

ஆக, இந்தக் கருத்துக்கணிப்புகள் எல்லாம் எதற்காக நடந்திருக்கின்றன என்ற கேள்வி எழுவதையும் தவிர்க்க முடியவில்லை.

-ஊர்க்குருவி.

# நல்லூர் சங்கிலியன் பூங்காவில் 26ஆம் திகதி தாவரங்களை அடையாளம் காணும் போட்டி

யாழ்ப்பாணம், நவ. 25

போர்க் காலத்திற் கூட இயற்கை எனது நண்பன் என்று இயற்கையை நேசித்த தமிழர் வாழ்வியல் இன்று இயற்கையில் இருந்து விலகிச் சென்று கொண்டிருக்கிறது. இதுவே இன்றைய சுற்றுச் சூழல் பிரச்னைகளுக்கெல்லாம் மூல காரணம். இதனைக் கருத்திற் கொண்டு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் இயற்கையை நேசிக்கக் கற்றுக் கொடுக்கும் வகையில் தாவரங்களை அடையாளம் காணும் தாவராவதானி போட்டி ஒன்றை நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கார்த்திகை வாசம் மலர்க் கண்காட்சியில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடத்த உள்ளது.

தாவராவதானி போட்டியில் பால், வயது வேறுபாடின்றி முன் பதிவு இல்லாமல் எவரும் கலந்து கொள்ளமுடியும் எனவும் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு தாவராவதானி சான்றிதழோடு பரிசுகளும் வழங்கப்படும் எனவும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் அறிவித்துள்ளது. (அ)

## 2023 இல் பொலிஸ் தடுப்பு காவலில் 20 இற்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு

கொழும்பு, நவ. 25

பொலிஸ் காவலில் உள்ள சந்தேக நபர்களை கையாள்வதற்கான புதிய வழிகாட்டுதல்களை தாம் தயாரித்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களின் மரணங்கள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளதை கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மனித உரிமை ஆணையாளர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

இந்த ஆண்டில் இதுவரை 20 இற்கும் மேற்பட்டோர் பொலிஸ் காவலில் இறந்தனர். மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு டிசெம்பர் 11ஆம் திகதி வழிகாட்டுதல்கள் வெளியிடப்படும் என நிமல் புஞ்சிஹேவா கூறினார். (அ)

## வட்டி விகிதங்களை மேலும் குறைக்கும் மத்திய வங்கி!

கொழும்பு, நவ. 25

மத்திய வங்கி கொள்கை வட்டி வீதங்களை குறைத்துள்ளது. 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ், நாணயச் சபை தமது இரண்டாவது நாணயக் கொள்கை மீளாய்வை நேற்று முன்தினம் நடத்தியது.

இதன்போதே கொள்கை வட்டி வீதங்களை குறைப்பதற்கு நாணயச் சபையினால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி, நிலையான வைப்பு வசதி வீதம் 10 இல் இருந்து 9 வீதமாக குறைக்கப்பட்டுள்ளது. அத்துடன், நிலையான கடன் வசதி வீதம் 11 இல் இருந்து 10 வீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் மற்றும் உலகப் பொருளாதாரத்தில் தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திகளை பகுப்பாய்வு செய்ததன் பின்னர் இந்த தீர்மானம் எட்டப்பட்டதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (அ)

## பொன்னாலையில் கஞ்சா விற்றவர் விசேட அதிரடிப்படையால் கைது!




யாழ்ப்பாணம், நவ. 25

பொன்னாலையில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டார் எனக் கருதப்படும் சந்தேக நபர் நேற்று வெள்ளிக்கிழமை விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டார்.

விசேட அதிரடிப் படையினரும் புலனாய்வாளர்களும் இணைந்து மேற்கொண்ட விசேட நடவடிக்கையின்போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

கைதானவர் பொன்னாலையில் திருமணம் செய்து வாழ்பவர் என்று கூறப்படுகின்றது.

இதன்போது, சந்தேகநபரிடம் இருந்து பல இலட்சம் ரூபாய் பெறுமதியான கஞ்சா பொதிகளும் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-03)

## நினைவு நாளும் புத்தக வெளியீடும்

யாழ்ப்பாணம், நவ. 25

பொதுவுடமை இயக்கத்தின் புரட்சிகர முன்னோடி தோழர் கே. ஏ. சுப்பிரமணியத்தின் 34ஆவது விடைபெற்ற ஆண்டு நினைவு நாள் 27 ஆம் திகதி திங்கள்கிழமை சுழிபுரம் கே. ஏ. எஸ். சத்தியமனை நூலகத்தில் பிற்பகல் 3 முதல் மாலை 5 மணிவரை நினைவுகூரப்படவுள்ளது.

இந்நிகழ்வைத் தொடர்ந்து திருமதி வள்ளியம்மை சுப்பிரமணியம் அவர்களின் "ஒரு கம்யூனிஸ்ட் இணையர் வாழ்வின் சந்திப்புகள்" நூல் வெளியீடும் கலந்துரையாடலும், "சிறுபொறி" சஞ்சிகையின் இரண்டாவது பொறி வெளியீடும், கே.ஏ.எஸ் சத்தியமனை நூலகத்தின் 2ஆம் ஆண்டு நிறைவு விழாவும் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கே.ஏ.எஸ். சத்தியமனை நூலக நிர்வாகத்தினர் அன்புடன் அழைக்கின்றனர். (அ)

## நட்டத்தில் மில்கோ

கொழும்பு, நவ. 25

இலாபத்தில் இயங்கிவந்த மில்கோ நிறுவனம் தற்போதைய தலைவர் ரேணுக பெரேராவின் கீழ் நட்டத்தில் இயங்கும் நிறுவனமாக மாறியுள்ளது என சுதந்திர சேவையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

2019, 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் இலாபம் ஈட்டிய நிறுவனம் தற்போது கடனில் இயங்கிவருவதாக மில்கோ நிறுவனத்தின் சுதந்திர சேவையாளர் சங்கத்தின் தலைவர் சுமித் அத்தநாயக்க தெரிவித்தார்.

மில்கோ நிறுவனத்தின் தலைவர் லசந்த விக்ரமசிங்க பதவியிலிருந்து நீக்கப்பட்டு, பொதுஜன பெரமுனவின் முகாமைத்துவச் செயலாளராக பதவிவகித்த ரேணுக பெரேரா கடந்த ஜனவரி மாதம் அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டார். (அ)

## வவுனியாவில் விபத்து முதியவர் உயிரிழப்பு

வவுனியா, நவ. 25

பாரவூர்தி சைக்கிளை மோதிய விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்தார். வவுனியா நகர பள்ளிவாசல் முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

ஏ-9 வீதியில் இருந்து ஹொரவப்பொத்தானை வீதியூடாக கோவில்குளம் நோக்கி சென்ற பாரவூர்தி பள்ளிவாசல் முன்பாக பயணித்தபோது சைக்கிளை மோதியது.

இதில், சைக்கிளில் பயணித்த முதியவர் படுகாயமடைந்தார். வவுனியா பொது மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டபோதும் உயிரிழந்தார்.

இந்த விபத்தில் நெடுங்குளத்தை சேர்ந்த முத்துபண்டா (வயது 71) என்பவர் உயிரிழந்தார். (ஐ)

Eelanadu ஈழநாடு
25.11.2023 சனிக்கிழமை
சோபகிருது வருடம், கார்த்திகை 09

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ரணில் விக்கிரமசிங்கவின் தீர்வு?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல் தீர்வு விடயத்தில் முன்னேற்றங்களை கண்டுவருவதான ஒரு தோற்றத்தை சர்வதேச அரங்குகளில் ஏற்படுத்த முயற்சிக்கின்றார். மேற்குலக ஊடகங்களுக்கு நேர்காணல்களை வழங்கும்போது, நல்லிணக்க முயற்சிகளில் முன்னேற்றமடைந்து வருவதாகவும் தமிழ் கட்சிகளுடனான பேச்சில் முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்றும் கூறிவருகின்றார். தற்போது அவ்வாறானதொரு கருத்தையே இந்திய ஊடகங்கள் மத்தியிலும் முன்வைக்கின்றார்.

இத்தனைக்கும் ஈழத் தமிழர் விவகாரத்தில் என்ன நடைபெறுகின்றது என்பது இந்திய ஊடகங்களுக்கு நன்கு தெரிந்த விடயம். அவ்வாறிருந்தபோதும், தமிழ் மக்களின் இனப்பிரச்னைக்கான தீர்வு தொடர்பான இந்தியாவின் கருத்துகளுடன் தான் உடன்படவில்லை என்று கூறியிருக்கின்றார். ஈழத் தமிழ் மக்களின் இனப்பிரச்னைக்கான தீர்வாக 13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலான அரசியல் தீர்வொன்றை இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது.

ரணில் விக்கிரமசிங்க 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தப் போவதாகக் கூறியிருந்தார். இது தொடர்பில் தமிழ்த் தேசிய கட்சிகளுடன் பேச்சுகளிலும் ஈடுபட்டார். அரசமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச்சட்டம் ஏற்கனவே, பலவீனப்படுத்தப்பட்டுள்ளது. இந்திய படைகள் இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்டமையைத் தொடர்ந்து, அப்போதைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட முக்கிய அதிகாரங்கள் சிலவற்றை மீண்டும் மத்திய அரசாங்கத்தின் கீழ் கொண்டு சென்றார். இதில் தமிழர் பக்கத்திலும் மோசமான தவறுகள் இழைக்கப்பட்டன என்பதும் உண்மைதான்.

அவற்றை மீளவும் மாகாண சபைகளுக்கு வழங்குவதிலிருந்துதான் 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்த முடியும். இந்த விடயங்கள் தமிழர் தரப்பால் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. ஆனால், இந்த விடயத்தில் இதுவரையில் எந்தவொரு முன்னேற்றமும் ஏற்படவில்லை. ஆனால், ரணில் விக்கிரமசிங்கவோ அரசியல் தீர்வு விடயத்தில் முன்னோக்கி செல்வதாகக் கூறிவருகின்றார்.

ரணில் விக்கிரமசிங்க வாக்குறுதிகளை நிறைவேற்றியிருந்தால் தமிழ் கட்சிகள் இந்தியாவின் தலையீட்டை கோரும் நிலைமை ஏற்பட்டிருக்காது. அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தும் விடயத்தில் இதுவரையில் எந்தவொரு முன்னேற்றகரமான விடயங்களும் இடம்பெறவில்லை.

யுத்தம் முடிவுற்று பதினான்கு வருடங்கள் கடந்துவிட்ட பின்னரும் கூட, இலங்கையின் ஆட்சியாளர்களால் நல்லிணக்க விடயத்தில் முன்னோக்கி பயணிக்க முடியவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் இலங்கை மீது வெளிநாடுகளின் அழுத்தங்கள் தொடர்கின்றன. நல்லிணக்க முயற்சிகளில் முன்னேற்றங்களை காண்பிப்பதுதான் இவ்வாறான அழுத்தங்களுக்கான உண்மையான பதிலாகும். ஆனால், விடயங்களில் முன்னேற்றங்களை காண்பிக்காது, பொய்யான அபிப்பிராயங்களை வழங்குவதிலேயே அரசாங்கம் கவனம் செலுத்திவருகின்றது. ரணிலும் இதற்கு விதிவிலக்கல்ல. அவரும் கடந்தகாலத்தில் கூறப்பட்ட பொய்களை பின்தொடர முயற்சிக்கிறார் என்றே தெரிகின்றது.

**வடமாகாண மரநடுகை மாதம்**

**கார்த்திகை - 2023**

*“மரங்களை நடுகை செய்வது மனிதர்களில் அழகையும் உயர்ந்த நற்பண்புகளையும் குடிகொள்ளச் செய்யும் ஒன்றாகும்.”*

**- ஸ்டேர்லிங் மோர்ட்டன் (அமெரிக்க அரசியலாளர்)**



# மரண தண்டனையை எதிர்நோக்கும் தாயாருக்கு பொது மன்னிப்பு வழங்குக

### ஜனாதிபதியிடம் குரலற்றோரின் குரல் அமைப்பு கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 25

மரண தண்டனையை ஏதிர்நோக்கியுள்ள 2 பிள்ளைகளின் தாயான செ.சத்தியலீலாவை விடுதலை செய்வதற்குரிய பொதுமன்னிப்பை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்துதவுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் குரலற்றவர்களின் குரல் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

ஜனாதிபதிக்கான குறித்த கோரிக்கை கடிதத்தை வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் குரலற்றவர்களின் குரல் அமைப்பினரலால் நேரில் கையளிக்கப்பட்டுள்ளது.

ஆளுநரின் சார்பில் ஆளுநர் செயலக மக்கள் தொடர்பு அதிகாரி குறித்த கோரிக்கை கடிதத்தினை பொறுப்பேற்றுக் கொண்டார்.

குறித்த கோரிக்கை கடிதத்தின் பிரதிகள் வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன் தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கு அனுப்பிய கோரிக்கை கடிதம் வருமாறு,

14ஆண்டுகளாக சிறைவாசம் அனுபவித்து விடுதலையான பின்பு, மரண தண்டணையை எதிர்நோக்கியுள்ள இரண்டு பிள்ளைகளின் தாயான தமிழ் அரசியல் கைதி தொடர்பானது:-

மேற்படி, இல.6/3, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரியை வாழ்விடமாகக் கொண்ட இரண்டு பிள்ளைகளின் தாயான செ. சத்தியலீலா என்பவர் 14 ஆண்டு காலம் தமிழ் அரசியல் கைதியாக வெலிக்கடை சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கொழும்பு மேல் நீதிமன்றத்தினூடாக விடுவிக்கப்பட்டிருந்தார். எனினும் சட்டமாஅதிபர் திணைக்களத்தின் மேல்முறையீடு காரணமாக இப்பெண்மணி மீண்டும் மரணதண்டணையை எதிர்நோக்கியுள்ளார்.

அதாவது, 2004ம் ஆண்டு இடம் பெற்ற, அமைச்சர் டக்லஸ்தேவானந்தா மீதான குண்டுத்தாக்குதல் தொடர்பில் சந்தேகத்தின் பெயரில் முன்பள்ளி ஆசிரியையான குடும்பத் தலைவி செ. சத்தியலீலா என்பவர் அவசரகாலச் சட்டவிதியின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தார். இவர், சுமார் 14 ஆண்டுகள் இருந்தபடி நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு முகம் கொடுத்து கடந்த ஜனவரி 14, 2018 அன்று கொழும்பு மேல் நீதி மன்றினால் “15வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டாண்டு கடூழிய சிறைத் தண்டனையுடன் சேர்த்து 25 ஆயிரம் ரூபாய் தண்டப்பணமும் செலுத்த வேண்டும்.” என்கின்ற நிபந்தனையின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

இந்த நிலையில், மேல் நீதிமன்றம் வழங்கிய இவ்வழக்குத் தீர்ப்பில் திருப்தியுறாத சட்டமா அதிபர் அதனை ஆட்சேபித்து மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருந்தார். அதற்கமைய மேல்முறையீட்டு நீதிமன்றம் செ. சத்தியலீலா என்பவருக்கு ஜனவரி 23, 2023 அன்று மரணதண்டனை தீர்ப்பளித்துள்ளது. நிரந்தர வருமானமின்மையால் வறுமையின் கோரப்பிடிக்குள் சிக்கித்தவிக்கும் சத்தியலீலா தனக்கென ஒரு சட்டத்தரணியை அமர்த்துவதில் கூட மிகச்சிரமப்படுகிறார்.


இவ்வாறான நிலையில்தான் இவர், இறுதி முயற்சியாக இலங்கை உயர் நீதிமன்றத்தின் வாசலை ஏகியிருக்கிறார். கௌரவ ஜனாதிபதியாகிய தாங்கள், சமூகங்களுக்கிடையிலான நல்லெண்ண சமிக்கையாக தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை உட்பட இன்னபிற விடயங்களிலும் கரிசனை கொள்வதாக நம்பப்படுகிறது.

இதேநேரம், அரச இயந்திரங்களின் செயல்பாடுகளோ முற்றிலும் மாறாக இருப்பது கவலையளிக்கிறது. இவ்வழக்குடன் சம்பந்தபட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சந்தேகநபரான “செ.சத்தியலீலாவை வழக்கிலிருந்து விடுவிப்பது தொடர்பில் தனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை” என்று திறந்த மேல் நீதிமன்றத்தில் வெளிப்படையாக தெரிவித்திருந்த நிலையிலும்கூட இப்பெண்மணி இன்று சாவுத் தண்டனைக்கு ஆளாக்கப்பட்டுள்ளார்.

ஆகவே, “14 வருடங்களாகக் குடும்பம், பிள்ளைகள், பெற்றோர், உறவுகள் என அனைவரையும் பிரிந்து சிறைக்குள் சொல்லொணா துன்பங்களை அனுபவித்துவிட்டு விடுதலையாகி வெளியில் வந்த பின்பும் ஒரு மரண தண்டனை கைதியாக மீண்டும் சிறை செல்வதை என்னால் நினைத்துப் பார்க்க முடியாது. அதற்கு, உயிரை மாய்த்துக் கொள்வதே மேல்” என்ற நிலைப்பாட்டில் இருக்கும் இந்த பெண்மணிக்கு ஏதேனுமோர் அரசியல் தீர்மானத்தின் அடிப்படையில் பொது மன்னிப்பை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துதவுமாறு கௌரவ ஜனாதிபதி அவர்களை, ஒரு சுயாதீன மனித நேய அமைப்பாக நாம் கேட்டு நின்கின்றோம்-என்றுள்ளது.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**நவம்பர் - 25 சனிக்கிழமை**
**சோபகிருது வருடம் - கார்த்திகை 09**
**நல்ல நேரம் : 07.30 - 09.00**
**ராகு காலம் : 09.00 - 10.30**
**திதி : திரையோதசி**

## இன்றைய ராசிபலன்

**மேடம்**
குடும்பத்தை பற்றிய கவலைகள் வந்து போகும். புதியவர்களை நம்பி ஏமாற வேண்டாம். வியாபாரத்தில் பாக்கிகளை போராடி வசூலிப்பீர்கள். சோர்வு வந்து நீங்கும். தடைகளை தாண்டி முன்னேறுவீர்.

**இடபம்**
ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். பெற்றோரின் ஆதரவு பெருகும். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் நினைத்ததை முடிப்பீர்கள்.

**மிதுனம்**
எதையும் சமாளிக்கும் மனப்பக்குவம் கிடைக்கும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். மரியாதைக் கூடும். முயற்சியால் முன்னேறும் நாள்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் உண்டு. திடீர் பணவரவு உண்டு. வியாபாரத்தில் புதிய யுக்திகளை கையாண்டு வியாபாரத்தை பெருக்குவீர்கள். புதிய பாதை தெரியும் நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான வேலைகளை எல்லாம் கையில் எடுத்து கொள்ளாதீர்கள். வளைந்து கொடுத்துப் போவது நல்லது. புதிய முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கன்னி**
பிள்ளைகள் உங்கள் அருமையைப் புரிந்துகொள்வார்கள். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். உயரதிகாரி உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**துலாம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். அமோகமான நாள்.

**விருட்சிகம்**
புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். புதுமை படைக்கும் நாள்.

**தனுசு**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**மகரம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். நண்பர்கள் உறவினர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். உத்தியோகத்தில் உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புதிய அத்தியாயம் தொடங்கும் நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பல வேலைகளையும் இழுத்து போட்டு பார்க்க வேண்டி வரும். வியாபாரத்தில் வேலையாட்கள் அதிருப்தி அடைவார்கள். வேலைச்சுமை அதிகரிக்கும்.

# பாராளுமன்ற தேர்தலில் தி. மு. கவிடம் கூடுதல் தொகுதிகளை கேட்போம்!

## தமிழக காங்கிரஸ் அறிவிப்பு



**சென்னை, நவ. 25**

**கடந்த பாராளுமன்றத் தேர்தலை காட்டிலும் தமிழகத்தில் கூடுதல் இடங்களை தி. மு. கவிடம் கேட்போம் என்று தமிழ் நாடு காங்கிரஸ் குழுவின் தலைவர் கே. எஸ். அழகிரி தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக, திருப்பூரில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் கூறியவை வருமாறு,

சுதந்திரத்துக்கு முன்பே கோயில்களின் நிர்வாகம், இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில்தான் இருந்தது. தமிழகத்தின் வரலாறு தெரியாமல் நாட்டின் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பேசுகிறார். கோயில்கள் அரசின் கையில் இருப்பதுதான் பாதுகாப்பானது. நாட்டிலேயே தமிழகத்தில்தான் ரூ.5 ஆயிரம் கோடி சொத்துகளை இந்து சமய அறநிலையத் துறை மீட்டுள்ளதை பா. ஜ. க. வரவேற்க வேண்டும். சட்டப்பேரவை மூலமாக தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டுமா, உச்ச நீதிமன்றம் சென்றுதான் நிறைவேற்ற வேண்டுமா என்பதை ஆளுநரிடம் கேட்கிறோம்.

திருவண்ணாமலை விவசாயிகள் மீது போடப்பட்ட குண்டர் சட்டம் திரும்பப்பெறப்பட்டது. காவிரியை வைத்து கர்நாடகா பா. ஜ. க. - தமிழக பா. ஜ. க. அரசியல் செய்கின்றன. கடந்த தேர்தலை காட்டிலும் வரும் பாராளுமன்றத் தேர்தலில் கூடுதல் இடங்களை தி. மு. கவிடம் கேட்போம். உலகக் கிண்ணக் கிரிக்கெட் இறுதிப் போட்டிக்கு நடிகர், நடிகைகளை அழைத்தவர்கள், நாட்டுக்காக விளையாடி உலகக் கிண்ணம் வென்றவர்களை முறையாக அழைக்கவில்லை. வல்லபாய் பட்டேல் பெயரில் இருந்த ஸ்டேடியத்தை புனரமைத்து மோடி பெயரில் மாற்றப்பட்டது. இது நில அபகரிப்பு போல் ஸ்டேடியம் அபகரிப்பாக உள்ளது - என்றார்.

(ஐ)

# த. மா. காங்கிரஸ் இப்போது எந்த கூட்டணியிலும் இல்லை!

## அந்தக் கட்சியின் தலைவர் அறிவிப்பு



சென்னை, நவ. 25

தமிழ் மாநில காங்கிரஸ் தற்போது எந்த கூட்டணியிலும் இல்லை. கூட்டணி குறித்து ஜனவரி இறுதியில் அறிவிப்போம் என்று கட்சியின் தலைவர் ஜி. கே. வாசன் கூறினார்.

திண்டுக்கல்லில் செய்தியாளர்களிடம் அவர் நேற்று கூறியவை வருமாறு,

மக்களவைத் தேர்தலை முன்னிட்டு, மாநிலம் முழுவதும் பயணம் மேற்கொண்டு, நிர்வாகிகளை சந்தித்துப் பேசி, கட்சியை பலப்படுத்தி வருகிறேன்.

தை மாதம் பிறந்த பிறகு, கட்சி நிர்வாகிகள், தொண்டர்களின் கருத்துகளைக் கேட்க உள்ளேன். அவர்கள் வாக்காளர்களின் எண்ணங்களைப் பிரதிபலிப்பார்கள். அதனடிப்படையில் கூட்டணி குறித்து முடிவு செய்யப்படும்.

த. மா. கா. தற்போது எந்த கூட்டணியிலும் இல்லை. கூட்டணி குறித்து அதிகாரபூர்வமாக ஜனவரி மாத இறுதியில் அறிவிப்போம். தமிழகத்தில் மரியாதைக்குரிய கட்சியாக தமாகா உள்ளது - என்றார்.

(ஐ)

# விடுதலையான 15 மீனவர்கள் இராமேஸ்வரம் திரும்பினர்!

இராமேஸ்வரம், நவ. 25

இராமநாதபுரம் - இராமேஸ்வரத்தை சேர்ந்த 60 மீனவர்கள் மண்டபத்தை சேர்ந்த 4 மீனவர்கள் என மொத்தம் 64 மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றபோது, எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் 63 மீனவர்கள் நீதிமன்றங்களால் விடுதலை செயயப்பட்டனர். ஒரு மீனவர் இரு தடவைகள் எல்லை தாண்டி மீன்பிடித்தார் என்ற குற்றச்சாட்டில் இரு ஆண்டுகள் சிறை விதிக்கப்பட்டது.

விடுதலையான 63 மீனவர்களில் முதல்கட்டமாக 15 பேர் மூன்று தினங்களுக்கு முன்னர் விமானம் மூலம் தாயகம் திரும்பினர்.

இந்நிலையில், 2ஆவது கட்டமாக மேலும் 15 மீனவர்கள் நேற்றுமுன்தினம் தமிழகம் திரும்பினர். இவர்கள் நேற்று இராமேஸ்வரத்தை வந்தடைந்தனர்.

(ஐ)

# எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்பது வெறும் பேச்சில் மட்டுமே இருக்கிறது

## அன்புமணி ராமதாஸ்

சென்னை, நவ. 25

“எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என வெறும் பேச்சு மட்டும்தான் இருக்கிறது” என பா. ம. க. தலைவர் அன்புமணி பேசியுள்ளார்.

தமிழை உயர்நீதிமன்ற வழக்காடு மொழியாக்க வேண்டும் மற்றும் சென்னை உயர்நீதிமன்றத்தின் பெயரை தமிழ்நாடு உயர்நீதிமன்றம் எனப் பெயர் மாற்ற வேண்டும் ஆகிய கோரிக்கையை வலியுறுத்தி சென்னையில் நடைபெற்ற போராட்டத்தில் பா. ம. க. தலைவர் அன்புமணி பேசியவை வருமாறு,

தமிழை உயர்நீதிமன்ற வழக்காடு மொழியாக்க வேண்டும். எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என வெறும் பேச்சு மட்டும் தான் இருக்கிறது. இந்த போராட்டம் உயர்நீதிமன்றத்திற்கு மட்டுமானது அல்ல் தமிழுக்கும், தமிழகத்திற்குமான போராட்டம். அந்தந்த மாநிலங்களில் உள்ள நீதிமன்றங்களில் அம்மாநில மொழியை வழக்காடு மொழியாக்க வேண்டும் என உச்சநீதிமன்ற நீதிபதிகள் வலியுறுத்தியுள்ளனர். இதனை பேசினால் மட்டும் போதாது, நடைமுறைப்படுத்த வேண்டும். தமிழகத்தில் தமிழை காப்பாற்ற வேண்டும் என்ற நிலைக்கு நாம் வந்துள்ளோம் - என்றார். (ஐ)

# இலங்கையில் குழந்தைகள் கடத்தி வெளிநாட்டவர்களுக்கு விற்பனை!

## சி.ஐ.டியின் விசாரணைகள் தீவிரம்

கொழும்பு, நவ. 25

**இலங்கையில் குழந்தைகளை கடத்தி வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்யும் கும்பல் தொடர்பான விசாரணைகளை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தீவிரப்படுத்தியுள்ளது.**

இந்த குற்றங்கள் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் கொழும்பு உயர் நீதிமன்ற நீதிவான் பிரசன்ன அல்விஸிடம் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளனர்.

அதிகளவிலான குழந்தைகள் கண்டி பிரதேசத்தில் இருந்து கடத்தப்பட்டுள்ளதாக தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த கடத்தல் தொடர்பாக நோர்வேயில் இருக்கும் இலங்கை பிரஜை ஒருவரிடம் இருந்து முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பான விசாரணைகளை விரைவாக மேற்கொண்டு சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு உயர்நீதிமன்ற நீதிவான் பிரசன்ன அல்விஸ் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் தெரிவித்துள்ளார். (அ)

# பொலிஸ் விளக்கமறியல் சந்தேகநபர்களை கையாள்வதற்குப் புதிய வழிகாட்டுதல்கள்!



கொழும்பு, நவ. 25

பொலிஸ் விளக்கமறியலில் உள்ள சந்தேக நபர்களை கையாள்வதற்கான புதிய வழிகாட்டுதல்களை தயாரித்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொலிஸ் விளக்கமறியலில் உள்ள சந்தேக நபர்களின் மரணங்கள் அண்மையில் அதிகரித்துள்ளமையை கருத்திற்கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நிமல் புஞ்சிஹேவா குறிப்பிட்டார்.

இந்த ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம், 20 இற்கும் மேற்பட்டோர் பொலிஸ் விளக்கமறியலில் உயிரிழந்துள்ளதாக அவர் கூறினார்.

இதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில், உலக மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு அடுத்த மாதம் 11 ஆம் திகதி குறித்த வழிகாட்டுதல்கள் வெளியிடப்படும் என இலங்கை மனித உரிமைகள் ஆணையாளர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார். (அ)

# சம்பிக்கவுக்கு எதிரான வழக்கை இடைநிறுத்த நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, நவ. 25

கடந்த 2016ஆம் ஆண்டு ராஜகிரிய பிரதேசத்தில் பாரிய வாகன விபத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவுக்கு எதிராக மேல் நீதிமன்றில் விசாரணையில் உள்ள வழக்கு விசாரணையை இடைநிறுத்துமாறு அறிவித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவை பிறப்பித்துள்ளது.

இந்த மனு மீதான விசாரணை முடியும் வரை இந்த இடைக்கால உத்தரவு அமுலிலிருக்கும் என நீதிமன்ற உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

நீதியரசர் நிஸங்க பந்துல கருணாரத்ன மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் சமத் மொராயஸ் ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

பாட்டலி சம்பிக்க ரணவக்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட மனுவொன்றை விசாரிப்பதற்கு அனுமதியளித்து நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. (அ)

# லொறி மோதி மாணவன் பலி!

கொழும்பு, நவ. 25

கேகாலை - மாவனெல்லை பிரதேசத்தில் லொறியால் மோதப்பட்டு பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மாவனெல்லை பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் கேகாலை, மாவனெல்லை, உசாபிட்டி பிரதேசத்தை சேர்ந்த 13 வயதுடைய பாடசாலை மாணவராவார்.

இவர் உதுவன்கந்தவில் இருந்து உசாபிட்டி நோக்கி பயணித்த லொறி மோதியே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் மாவனெல்லை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் லொறியின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# களுத்துறையில் ரயில் விபத்தில் பெண் பலி!

கொழும்பு, நவ. 25

களுத்துறை வடக்கு பிரதேசத்தில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை ரயிலினால் மோதப்பட்டு பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக களுத்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் களுத்துறை வடக்கு பிரதேசத்தை சேர்ந்த 72 வயதுடைய பெண் ஆவார்.

இவர் ரயில் பாதையை கடக்கும்போது தெற்கு களுத்துறையில் இருந்து மருதானை நோக்கி பயணித்த ரயிலில் மோதுண்டு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் நாகொடை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# இராணுவ குறைப்பு சாத்தியம் இல்லை!

## கூறுகிறார் சரத் பொன்சேகா



கொழும்பு, நவ. 25

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் இராணுவத்தினரது எண்ணிக்கையை ஒரு இலட்சமாக குறைப்பதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது. இது ஒருபோதும் சாத்தியமாகாது என்று முன்னாள் இராணுவத் தளபதியும் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பியான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

பொருளாதார பாதிப்பு என் பதற்காக வீட்டுக்கு ஜன்னல் மற்றும் கதவுகளை பொருத்தாமல் இருக்க முடியாது.எனவே பாதுகாப்புக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டேயாகவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற 2024 ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டத்தின் குழு நிலை விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் தேசிய பாதுகாப்பு பலவீனப்படுத்தப்பட்டது. ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் தமது குறுகிய தேவைகளுக்காக தேசிய பாதுகாப்பை பலவீனப்படுத்தின. இதன் பெறுபேறு ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்குதல் மூலம் வெளிப்படுத்தப்பட்டது.

2024 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு துறையில் முப்படைகள்,பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளுக்கு 423 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை விட இம்முறை 12 பில்லியன் ரூபாய் மேலதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. இராணுவத்துக்கு 218 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் பாதுகாப்பு துறைக்கு அதிக நிதி ஒதுக்குவது அவசியமற்றது என்று ஒரு தரப்பினர் குறிப்பிடுகிறார்கள்.பொருளாதார பாதிப்பு என்பதற்காக வீட்டுக்கு ஜன்னல் மற்றும் கதவுகளை பொருத்தாமல் இருக்க முடியாது.

யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் இராணுவத்தினரது எண்ணிக்கை திடீரென குறைவடைந்துள்ளது.இறுதிக் கட்ட யுத்தத்தின் போது 2 இலட்சமாக காணப்பட்ட இராணுவத்தினரது எண்ணிக்கை தற்போது 1,53,000 ஆக உள்ளது. பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் இராணுவத்தினரது எண்ணிக்கையை 1 இலட்சமாக குறைப்பதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது.இது ஒருபோதும் சாத்தியமாகாது.

நவீன உலகுக்கு பொருந்தும் வகையில் இராணுவத்துக்கு ஆயுதங்களை பெற்றுக்கொள்ள வேண்டும். தற்போதைய நிலையில் பயன்படுத்த முடியாத யுத்த தாங்கிகளே இராணுவத்திடம் உள்ளன.விமானப்படையிடம் ஒரு ஜெட் விமானம் மாத்திரமே உள்ளது .ஆகவே இம்முறை புதிய ஆயுதங்களை கொள்வனவு செய்யவேண்டும்.

தற்போது தேசிய பாதுகாப்பு கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட கத்தோலிக்க சமூகத்தினருக்கும், ஏனைய மக்களுக்கும் இதுவரை நியாயம் கிடைக்கவில்லை. உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத்தாக்குதலுக்கு யார் முக்கிய சூத்திரதாரி என்பதை ஏற்கனவே அறிவித்துள்ளோம். எனக்கு வாய்ப்பு கிடைத்தால் சூத்திரதாரிகளையும், கடமைகளை தவறவிட்டவர்களையும் நிச்சயம் சிறைக்கு அனுப்புவேன் -என்றார். (அ)

# 6 வருடங்கள் தடுத்து வைக்கப்பட்ட 30 ஆபிரிக்க பிரஜைகள் விடுதலை!

கொழும்பு, நவ. 25

6 வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த 30 ஆபிரிக்கப் பிரஜைகளை விடுதலை செய்யுமாறு கொழும்பு பிரதான நீதிவான் பிரசன்ன அல்விஸ் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபர்களுக்கு எதிராக எடுக்கப்படவேண்டிய மேலதிக நடவடிக்கைகள் குறித்து அறிவுறுத்துமாறு சட்டமா அதிபரிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை மேற்கொண்டிருந்தது.

இந்நிலையில், அவர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்கு போதிய ஆதாரங்கள் இல்லை என சட்டமா அதிபர் அறிவித்ததையடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

30 ஆபிரிக்க பிரஜைகள் நிதி மோசடி தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு வெலிசறை வெளிநாட்டு தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடம் கைப்பற்றப்பட்ட பொருட்களை மீள ஒப்படைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், அவர்களின் வெளிநாட்டு பயணத்தடையை நீக்கவும் உத்தரவிட்டார். (அ)

# பெண் மீது பாலியல் துஷ்பிரயோகம் அநுராதபுரத்தில் வைத்தியர் கைது!

கொழும்பு, நவ. 27

தனது தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைபெற வந்த 29 வயதுடைய பெண்ணை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் எனக் கூறப்படும் வைத்தியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக அநுராதபுரம் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் கடமையாற்றும் வைத்தியர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரால் புளியங்குளம் பிரதேசத்தில் நடத்தப்படும் வைத்திய நிலையத்தில் சிகிச்சைபெறச் சென்ற 29 வயதுடைய பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டார்.

# நினைவேந்தல்களுக்கு இடையூறு செய்யாதீர்!

## சபையில் அங்கஜன் எம்.பி. வலியுறுத்தல்

கொழும்பு, நவ. 25

**யுத்தத்தில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு ஜனாதிபதி அனுராதபுரத்தில் பொது நினைவுத்தூபியை ஸ்தாபிக்காவிட்டாலும் பரவாயில்லை. வடக்கு மற்றும் கிழக்கில் தமது உறவுகளுக்கு மக்களை அஞ்சலி செலுத்த விடுங்கள். மக்கள் அஞ்சலி செலுத்துவதனை தடுக்க முடியாது என ஜனாதிபதியும் கூறுகின்றார். ஆனால் அவரின் கட்டுப்பாட்டில் இருக்கும் அரசு இயந்திரம் அஞ்சலி நிகழ்வுகளுக்கு தடை கேட்டு வழக்கு தாக்கல் செய்கிறது என பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்ற குழுக்களின் பிரதி தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற 2024 ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றுக்கான செலவுத்தலைப்புக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த வாரம் எமது மக்களுக்கு உணர்வு பூர்வமானது. தங்களின் உயிரிழந்த உறவுகளுக்கான நினைவு வாரம். அதனை தடுக்க பல வழிகளிலும் முயற்சிகள் நடக்கின்றன. ஆனால் தடை கோரும் மனுக்களை நீதிமன்றங்கள் நிராகரிப்பதனை நான் வரவேற்கின்றேன். மக்கள் அஞ்சலி செலுத்துவதனை தடுக்க முடியாது என ஜனாதிபதியும் கூறுகின்றார். ஆனால் அவரின் கட்டுப்பாட்டில் இருக்கும் அரசு இயந்திரம் அஞ்சலி நிகழ்வுகளுக்கு தடை கேட்டு வழக்குப் போடுகின்றது.



யுத்தத்தில் இறந்தவர்களை அஞ்சலிப்பதற்காக ஜனாதிபதி பொது இடத்தில் தூபி ஒன்றை நிர்மாணிப்பதாக அறிவித்தார். அறிவிப்போடு மட்டுமே அது உள்ளது. வேறு எதனையும் காணவில்லை. அரசு அனுராதபுரத்தில் தூபி கட்ட விரும்பினாலும் முள்ளிவாய்க்காலில் அந்த தூபியை கட்ட வேண்டும் என்பது தமிழ் மக்களின் நிலைப்பாடு.

நல்லிணக்கத்தை விரும்புகின்றோம் என்றால் தூபியை கட்ட முடியாது விட்டாலும் பரவாயில்லை. மக்கள் செலுத்தும் அஞ்சலிகளை தடை செய்யாமல் இருங்கள். இதனை ஜனாதிபதியும் உறுதி செய்யவேண்டும். இந்த அஞ்சலிகளை வைத்து இனவாத அரசியல் நடத்தக்கூடாது. ஆனால் இங்கு நடப்பதோ வேறு அதனை வரும் நாட்களில் எல்லோரும் பார்க்கலாம்-என்றார். (அ)

# சஜித், ரஞ்சித்துக்கு எதிரான டயானாவின் மனு தள்ளுபடி

கொழும்பு, நவ. 25

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ அதன் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோர் அந்த பதவிகளை சட்ட ரீதியாக வகிக்க தகுதியற்றவர்கள் என அறிவித்து இடைக்கால உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது.

இராஜாங்க அமைச்சர் டயனா கமகேயினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு மீதான விசாரணை நேற்று இடம்பெற்றபோதே, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சஜித் பிரேமதாஸ மற்றும் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோர் தொடர்ந்தும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமையில் நீடிப்பதால், அவர்கள் ஐக்கிய மக்கள் சக்தியின் பொறுப்புகளை வகிக்க சட்ட ரீதியாக தகுதியற்றவர்கள் என இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தமது மனுவில் குறிப்பிட்டிருந்தார். (அ)

# விபத்தில் யுவதி பலி!

கொழும்பு, நவ. 25

அம்பேபுஸ்ஸ - திருகோணமலை வீதியில் கலேவெல, மாத்தளை சந்திக்கு அருகில் நேற்று முன் தினம் பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் யுவதியொருவர் உயிரிழந்துள்ளார்.

லோச்சனா காவ்யாஞ்சலி என்ற 20 வயது யுவதியே உயிரிழந்துள்ளார்.

தம்புள்ளையில் இருந்து கலேவெல நோக்கி பயணித்த முச்சக்கரவண்டி எதிர்திசையில் வந்த பௌசருடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக கலேவெல பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது முச்சக்கர வண்டியில் தந்தை, தாய் மற்றும் இரண்டு மகள்கள் இருந்துள்ளனர்.

விபத்தில் படுகாயமடைந்த நால்வரும் கலேவெல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அங்கு ஒரு மகள் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்த யுவதி பொலன்னறுவை சிறிபுர பிரதேசத்தை சேர்ந்தவர் என்பதுடன் திருமண நிகழ்வொன்றில் கலந்து கொள்வதற்காக சென்று கொண்டிருந்தபோதே இந்த விபத்தில் சிக்கியுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கலேவெல பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# இலங்கைக் கிரிக்கெட் மனு மீதான விசாரணை மீண்டும் ஒத்திவைப்பு!

கொழும்பு, நவ. 25

இலங்கை கிரிக்கெட் இடைக்கால நிர்வாகக்குழுவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை வரை குறித்த மனு மீதான விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

குறித்த மனு மீதான விசாரணை சோபித்த ராஜகருணா மற்றும் டீ.என் சமரக்கோன் ஆகிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சார்பில் நீதிமன்றில் நேற்று முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மேலும் பல சமர்ப்பணங்களை முன்வைத்தார்.

இந்தநிலையில், குறித்த மனு மீதான மேலதிக பரிசீலனையை முன்னெடுப்பதற்காக வழக்கு எதிர்வரும் திங்கட்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (அ)

# தரப் பரிசோதனையில் 115 மருந்துகள் தோல்வி!

கொழும்பு, நவ. 25

2023ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் மொத்தம் 115 மருந்துகள் தரப் பரிசோதனையில் தோல்வியடைந்துள்ளன.

இதுவே ஒரு வருடத்தில் அதிக எண்ணிக்கையிலான மருந்துகள், தரப்பரிசோதனையில் தோல்வியடைந்த சந்தர்ப்பமாகும் என சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தரப்பரிசோதனையில் தோல்வியடைந்த மருந்துகளில், சுமார் 58 மருந்துகள் இந்தியாவில் தயாரிக்கப்பட்டவை என குறிப்பிடப்படுகின்றது.

45 மருந்துகள் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டவை என்பதுடன், ஏனையவை சீனா, பாகிஸ்தான், ஜப்பான் மற்றும் பங்களாதேஸ் போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவையாகும்.

இந்தநிலையில் தரப் பரிசோதனையில் தோல்வியடைந்ததாகக் கண்டறியப்பட்ட மருந்துகளில், சில மீளப் பெறப்பட்டுள்ளன.

2019ஆம் ஆண்டில் அதிக எண்ணிக்கையிலான மருந்துகள் தரப் பரிசோதனையில் தோல்வியடைந்திருந்தன. (அ)

# அரசமைப்பு பேரவைக்கு சித்தார்த்தனை இதுவரை நியமிக்காமல் இருப்பது ஏன்?

## வெளிப்படுத்துமாறு சபாநாயகரிடம் சஜித் கோரிக்கை



கொழும்பு, நவ. 25

அரசியலமைப்பு பேரவையின் செயற்பாடுகள் தொடர்பாக பாராளுமன்ற தெரிவுக்குழு அமைப்பதாக ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார். அவ்வாறு செய்வதற்கு ஜனாதிபதிக்கு முடியுமா என்பதையும் அரசியலமைப்பு பேரவையின் இறுதி நியமனம் இடம்பெறாமல் இருப்பது தொடர்பாகவும் சபைக்கு தெளிவு படுத்த வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபாநாயகரை கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சபைக்கு வந்து அரசியலமைப்பு பேரவை தொடர்பாக தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் கூட்டிக்காட்டி தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சபாநாயகர் நீங்களும் நானும் சபையில் இல்லாதபோது சபைக்கு வந்த ஜனாதிபதி அரசியலமைப்பு பேரவை தொடர்பாக பல விடயங்களை முன்வைத்துள்ளார். குறிப்பாக அரசியலமைப்பு பேரவையின் இறுதி நியமனத்தை மேற்கொள்ளாமை தொடர்பில் எதிர்க் கட்சித் தலைவரை சாடி ஜனாதிபதி குற்றம் சாட்டினார், இந்நியமனம் எவ்வாறு நடைபெற வேண்டும் என்பது அரசியலமைப்பின் 41 (ஏ) உறுப்புரையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியலமைப்பு பேரவைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சித்தார்த்தன் எம்.பி.யின் பெயரை பரிந்துரைத்துள்ளது. ஏன் இந்நியமனத்தை மேற்கொள்ளவில்லை என நான் பல்வேறு சந்தர்ப்பங்களில் வினவியுள்ளேன். இறுதி நியமனம் தொடர்பான பொறுப்பு எதிர்க்கட்சித் தலைவருக்கு இல்லை.

அத்துடன் நாங்கள் சபையில் இல்லாதபோது அரசியலமைப்பு பேரவையின் செயற்பாடுகள் தொடர்பாக தேடிப் பார்க்க பாராளுமன்ற தெரிவுக் குழுவை நியமிக்க வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். ஜனாதிபதிக்கு அவ்வாறு செயற்பட அதிகாரம் இல்லை.

நிறைவேற்று அதிகாரத்தின் அதிகாரங்களை ஓரளவிற்கு குறைக்கும் வகையில் தடைகள் மற்றும் சமன்பாடுகளை ஏற்படுத்தவே அரசியலமைப்பு பேரவை அமைக்கப்பட்டது. அவ்வாறு இல்லாமல் ஜனாதிபதி பெயரிட்டு அனுப்பும் அனைத்துக்கும் ஆம் என தெரிவிக்க முடியாது. பொலிஸர் அதிபர் நியமனம் தொடர்பாக அரசியலமைப்பு பேரவை தெளிவாக ஜனாதிபதிக்கு தெரிவித்திருக்கிறோம்.

எனவே அரசியலமைப்பு பேரவைக்கான இறுதி நியமனம் தொடர்பில் ஏற்பட்டுள்ள தாமத்துக்கான காரணம் என்ன என்பதை ஜனாதிபதிக்கு தெறிவிக்க வேண்டும். இல்லாவிட்டால் இது தொடர்பாக நாட்டுக்கு தவறான தகவல் செல்லும் -என்றார். (அ)

# மக்களுக்கு காணி உரிமையை வழங்குவதே பொருளாதாரத்துக்கான ஜனநாயக முதலீடு!

## அமைச்சர் மனுஷ நாணாயக்கார சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 25

**பிரதான உற்பத்திக் காரணியான காணியை முறையற்ற விதத்தில் அரசாங்கத்தின் கீழ் வைத்திருப்பது அரசியலமைப்பிற்கு எதிரான செயற்பாடாகும். அந்தத் தவறை 2024 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் மூலம் சரி செய்துள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணாயக்கார தெரிவித்தார்.**

**ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.**

**அவர் மேலும் தெரிவிக்கையில்-**

2024வரவு செலவுத்திட்டம் தொடர்பில் அவதானம் செலுத்த முன்னர் நாம் கடந்து வந்த பாதை குறித்து மீட்டிப்பார்க்க வேண்டும்.

கடந்த வருடங்களில் இந்த நாடு இருந்த நிலை பற்றி இன்று பலரும் கதைப்பதில்லை. கொவிட் தொற்றுப்பரவல் காரணமாக நாடு தனது வழமையான செயற்பாட்டை இழந்தது டன் முழுமையாக ஸ்தம்பித்து ஒரே இடத்தில் நின்றது என்று கூறலாம்.

அதன் ஊடாக நெருக்கடிகளை எதிர்கொண்ட பொருளாதாரம், பின்னர் நாட்டில் ஏற்பட்ட அரசியல், சமூக நிலையற்ற தன்மை காரணமாக பாரிய அளவில் வீழ்ச்சியடைத் தொடங்கியது.

இதனைத் தொடர்ந்து அப்போதைய அரசாங்கம், இந்த நாட்டைப் பொறுப்பேற்குமாறு எதிர்கட்சிகளுக்கு அழைப்பு விடுத்த போதிலும் இன்று எம்மை விமர்சிக்கும் எவரும் அன்று நாட்டிற்கு தலைமைத்துவம் வழங்க முன்வரவில்லை.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்தப் பாரிய சவால்மிக்க பொறுப்பை ஏற்றதுடன் மிகவும் அவதான மிக்க தீர்மானங்களை எடுத்து இந்நாட்டை தற்போது ஓரளவு ஸ்திரமான நிலைக்கு கொண்டு வந்துள்ளார்.

2023 ஆம் வரவு செலவுத்திட்டத்தில் நாட்டை பொருளாதார ரீதியில் ஸ்திரப்படுத்தும் விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டதுடன், 2024 ஆம் வரவு செலவுத்திட்டத்தில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தக் கூடிய வகையில் தமது வேலைத்திட்டங்களை சமர்ப்பித்துள்ளார்.

அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட பொருளாதார சீர்திருத்த வேலைத்திட்டத்தின் காரணமாக 2022 ஆம் ஆண்டின் இறுதியில் 73.70 வீதமாக அதிகரித்த பணவீக்கத்தை தற்போது, ஒற்றை இலக்கமாகக் குறைக்க முடிந்துள்ளது.

இதன் ஊடாக பணவீக்கத்தின் தாக்கத்தில் இருந்து நாட்டை மீட்க முடிந்தது. கடந்த வருடங்களில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சிக்கு அரச வருமான இழப்பே பிரதான காரணமாக அமைந்தது.

மீண்டும் அவ்வாறானதொரு நிலை ஏற்படாமல் இருப்பதற்காக அன்று நடைமுறைப்படுத்தப்பட்ட வரி விலக்குகள் உள்ளிட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் இந்த வருட வரவு செலவுத் திட்டத்தில் பல வேறு முன்மொழிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதுவரை காணி உறுதிகள் வழங்கப்படாத மக்களுக்கு அவர்களின் காணிகளுக்கு முழு உரிமையுடன் கூடிய காணி உறுதிப்பத்திரங்களை வழங்கவும் மற்றும் அடுக்கு மாடிக் குடியிருப்புகளில் வசிப்பவர்களுக்கு அந்த வீடுகளின் உரிமையை வழங்கவும் முன்மொழியப்பட்டுள்ளது.

இதற்கு இணையாக மலையக மக்களுக்கான காணிகளை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், “பிம் சவிய” வேலைத்திட்டத்தை விரைவாக நிறைவு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.


நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை மறுசீரமைக்கவும் அரச நிறுவனங்களின் செயற்திறனை அதிகரிக்கவும் அவற்றை டிஜிற்றல் மயப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன் இறக்குமதிகள் மூலம் எமது நாட்டுக்கு கிடைக்க வேண்டிய அந்நியச் செலாவணியை முழுமையாக பெற்றுக்கொள்ளும் நோக்கத்தில் இலங்கை சுங்கத்தில் இடம்பெறும் மோசடிகளை நிறுத்த அதன் செயற்பாடுகளை டிஜிடல் மயப்படுத்த அவசியமான பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

கடந்த காலத்தில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை மேம்படுத்தும் திட்டத்திற்காகவும் இம்முறை வரவு-செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விவசாயத்தை நவீனமயப்படுத்தவும் அதேபோன்று, பாரம்பரியமாக தாம் விவசாயம் செய்துவந்த விவசாயக் காணிகளின் உரிமையை குறித்த விவசாயிகளுக்கே வழங்கும் திட்டமும் அமுல்படுத்தப்படவுள்ளது- என்றார். (அ)

# ஒக்ரோபர் ஜனாதிபதித் தேர்தல் நடந்திருந்தால் அனுரகுமாரவே முன்னிலையில் இருந்திருப்பார்




கொழும்பு, நவ. 25

2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டால் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க 51 வீதத்துடன் முன்னிலையில் இருப்பார் என சுகாதார கொள்கை நிறுவகம் தெரிவித்துள்ளது.

2023 ஒக்ரோபர் மாதத்தின் ஐ.எச்.பி. இலங்கை கருத்துக் கணிப்பு கணக்கெடுப்பின்படி ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு 30 வீதமும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு 13 வீதமும் உள்ளது.

பொதுஜன பெரமுனவினால் பொது வேட்பாளர் ஒருவர் முன்நிறுத்தப்பட்டால், அது 6 வீதமாக இருக்கும் எனவும் கணக்கெடுப்பின் முடிவுகள் தெரிவிக்கின்றன. (அ)

# வழமைக்கு திரும்பியுள்ள மலையக ரயில் சேவைகள்

கொழும்பு, நவ. 25

நானுஓயா வரை மட்டுப்படுத்தப்பட்டிருந்த மலையகத்துக்கான ரயில் சேவைகள் வழமைக்கு திரும்பியுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஒஹிய மற்றும் இதல்கஸ்ஹின்ன இடையிலான ரயில் மார்க்கத்தில் கடந்த 22 ஆம் திகதி மண்மேடு சரிந்து விழுந்த நிலையில் மலையகத்துக்கான ரயில் சேவைகள் பாதிப்படைந்தன.

இதன் காரணமாக கொழும்பில் இருந்து பதுளை நோக்கி பயணித்த இரவுநேர அஞ்சல் ரயில் ஒஹிய இரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டது.

அத்துடன், பதுளையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த உடரட்ட மெனிக்கே இரயில் ஹப்புத்தளை ரயில் நிலையத்தில் நிறுத்திவைக்கபட்டது.

தொடர்ந்து நிலவிய சீரற்ற வானிலை மற்றும் அதனால் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக பதுளையில் இருந்து கொழும்பு நோக்கி பயண நடவடிக்கையினை முன்னெடுக்கும் அனைத்து ரயில் சேவைகளும் நானுஓயா வரை மட்டுப்படுத்தப்பட்டன.

நேற்று முன் தினம் முதல் மறு அறிவித்தல் வரை இந்த தீர்மானம் அமுலில் இருக்கும் மென ரயில்வே திணைக்களம் முன்னதாக அறிவித்தது.

இருப்பினும், தற்போது ரயில் சேவைகள் வழமைக்கு திரும்பியுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

# நீர்த்தேக்கங்களில் 95 வீதமானவை நிரம்பி வழியும் மட்டத்தை எட்டின!

ජාතික ජල සම්පාදන හා ජලාපවහන මණ්ඩලය
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை
NATIONAL WATER SUPPLY & DRAINAGE BOARD

கொழும்பு, நவ. 25

நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் உள்ள நீர்த்தேக்கங்களில் 95 வீதமான நீர்த்தேக்கங்கள் தற்போது நிரம்பி வழியும் மட்டத்தை எட்டியுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

அம்பாறை பிரதேசத்தில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கடும் மழை காரணமாக சில நீர்த்தேக்கங்கள் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் உள்ள நீர்த்தேக்கங்கள் நிரம்பி வழிவதாக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நீர்ப்பாசனத் துறையின் கீழ் 263 நீர்த்தேக்கங்கள் உள்ளன.

இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை நிலவரப்படி, 73 பிரதான நீர்த்தேக்கங்களில் 34 நீர்த்தேக்கங்கள் நிரம்பி வழிவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தவிர இலங்கை மின்சார சபையின் கீழ் உள்ள சமனலகுளம் நீர்த்தேக்கம் 10 வருடங்களின் பின்னர் நேற்று முன் தினம் திறந்து விடப்பட்டதுடன் காசல் ரீ நீர்த்தேக்கம் 3 வருடங்களின் பின்னர் நிரம்பி வழியும் மட்டத்தை எட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சஜித்தின் கோரிக்கையை ஏற்று சபாநாயகர் ரணிலுக்கு கடிதம்

கொழும்பு, நவ. 25

அரசியலமைப்பு பேரவை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் விளக்கமளிக்குமாறு ஜனாதிபதிக்கு கடிதம் எழுதவுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

பேரவைத் தலைவர் என்ற முறையில் தாம் அதைச் செய்வதாகவும் சபாநாயகர் கூறியுள்ளார்.

அரசியலமைப்பு பேரவை தொடர்பில் ஜனாதிபதி சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்டுள்ளதாக பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே சபாநாயகர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசியலமைப்பு பேரவையின் தாமதங்கள் குறித்து



ஆராய ஒரு தெரிவுக்குழுவை நியமிக்குமாறு ஜனாதிபதி நேற்று முன் தினம் வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் அழைப்பு விடுத்திருந்தார்.

இந்த விடயம் குறித்து கருத்து வெளியிட்ட சபாநாயகர்,

“நான் ஜனாதிபதிக்கு கடிதமொன்றை எழுதி, அவரது கருத்து குறித்து அரசியலமைப்பு பேரவையின் நிலைப்பாட்டை விளக்குவேன்.” என்றும் சபாநாயகர் வலியுறுத்தினார்.

அத்துடன், பொலிஸ்மா அதிபர் மற்றும் இலஞ்ச - ஊழல் ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்களின் அங்கீகாரம் தொடர்பான விடயங்கள் இரண்டு வாரங்களுக்குள் மேற்கொள்ளப்படும் எனவும் சபாநாயகர் உறுதியளித்தார். (அ)

# இராணுவ சிந்தனையிலிருந்து சரத் வீரசேகர ஜனநாயக சிந்தனைக்கு மாறுவது அவசியம்!

## ஜனாதிபதி செயலணியின் முன்னாள் உறுப்பினர் ஐ.ஏ. கலிலூர் ரஹ்மான்

அம்பாறை, நவ. 25

**விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை அழித்தவுடன் அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமிழ் தேசிய கூட்டமைப்பை தடை செய்யாதது தவறு என்றும் அதற்காக அவர் வருந்துவதாகவும் முன்னாள் பொலிஸ் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான சரத் வீரசேகர பாராளுமன்றத்தில் கூறியதை வன்மையாக கண்டிக்கிறேன். இப்படியான இனவாத சிந்தனை கொண்டோர்களின் நச்சுக்கருத்துக்களும் இனவாத செயற்பாடுகளினாலே இலங்கையில் 75 ஆண்டுகளுக்கு மேலாக இனப்பிரச்சினையை தீர்க்க முடியாதுள்ளது. இராணுவ சிந்தனையிலிருந்து ஜனநாயக சிந்தனைக்கு சரத் வீரசேகர வர வேண்டும் என ஜனாதிபதி செயலணியின் முன்னாள் உறுப்பினரும், கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ. கலிலூர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுலபமாக பேசி தீர்க்க வேண்டிய இன நெருக்கடிகளை பயங்கரவாதமாக மாற்றுவதற்கு சிலர் எடுக்கும் எத்தனங்களை எண்ணி இலங்கையர்கள் என்ற வகையில் நாம் வருத்தப்பட வேண்டும். அத்துடன், தெற்கின் அரசியல் அதிகாரத்தை தென்னிலங்கை இளைஞர்கள் மத்தியில் பகிர்ந்தளிக்காமல் அதனை கிளர்ச்சியாகப் பெரிதாக்குவதற்காக நாம் வெட்கப்பட வேண்டும். எனவே இப்படியான செயல்களினாலும், எண்ணங்களாலும் இலங்கையர்கள் ஆகிய நாம் இன்று பல்வேறு துறைகளில் பின் தங்கியுள்ளோம்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் காலத்தில் அதிகாரத்தில் இருந்த சரத் வீரசேகர சிங்கள, தமிழ், முஸ்லிம், சமூகத்தினரிடையே இருந்த கடும்போக்குவாத சிந்தனைகளை தடை செய்திருக்க வேண்டும். ஆனால் மாற்றமாக அவர்களின் ஆட்சிக் காலத்தில் அரசியல் தேவைகளுக்காக சிங்கள, தமிழ் முஸ்லிம் சமூகம் மத்தியில் தமக்கு அரசியல் இலாபம் கிடைக்க வேண்டி கடும்போக்குவாத சிந்தனைகளை தலைதூக்க அனுமதித்ததுடன் அதனை வளர்த்தும் விட்டனர்.

கருணா அம்மான், பிள்ளையான், டக்ளஸ் தேவானந்தா



போன்ற அவர்களுக்கு ஆதரவானவர்கள்கூட கேட்கும் அரசியல் தீர்வை வழங்குவதற்கு பதிலாக தமிழ்ச் சமூகத்தினரிடையே அரசியல் கருத்தியல் மோதல்களை அதிகப்படுத்தி காலத்தை வீணடித்துள்ளனர் என்பதே உண்மை. அத்துடன் ரவூப் ஹக்கீம், ரிஷாத், அதாவுல்லா, ஹிஸ்புல்லாஹ் போன்றவர்களை கொண்டு முஸ்லிம் சமூகத்திற்குள்ளும் பிரிவினைவாதத்தை உண்டாக்கி தீர்வை நோக்கி நகரவிடாமல் தடுத்ததுடன் அதற்கு மேல் ஒரு படிசென்று முஸ்லிம் - தமிழ் சமூகங்களுக்கிடையில் அரசியல் பிளவுகளை ஏற்படுத்தினர். இதனாலேயே பிற சமூகங்களில் இருந்து கடும்போக்குவாத சிந்தனையாளர்களும், கிளர்ச்சியாளர்களும் பிறந்ததைப் போன்று முஸ்லிம் சமூகத்தினரிடையேயும் பிறந்தனர்.

அத்துடன், 69 இலட்சம் வாக்குகளின் மூலம் கடந்தகாலங்களில் அதிகாரத்தை கைப்பற்றிய சரத் வீரசேகர ஆதரவளித்த அரசாங்கம் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை, பாராளுமன்ற பாதுகாப்பு தெரிவுக்குழு அறிக்கை, ஈஸ்டர் தெரிவுக் குழு அறிக்கை போன்றவற்றின் சிபாரிசுகளை சட்டரீதியாக அமுல்படுத்த முதுகெலும்பு இல்லாதது தீவிரவாதத்தை நோக்கிய இவர்களது திராணியற்ற கொள்கையை உணர்த்தியது. எனவே, ஜனநாயக நீரோட்டத்தில் சித்தாந்த ரீதியாக போராடும் அரசியல் அமைப்புக்களையும், கட்சிகளையும் அடக்கி அல்லது தடை செய்வதன் மூலம், இவ்வாறான இயலாமையை வெளிப்படுத்திய சரத் வீரசேகர மேலும் பிரிவினைவாத சித்தாந்தங்களை வலுப்படுத்தி தீவிரவாத பயங்கரவாதத்திற்கான பாதையை மீண்டும் திறக்கலாம் என்று எண்ணுகிறார்கள்.

நாம் எல்லோரும் ஒன்றிணைந்து அரசியலில் அதிகார இணக்கப்பாட்டுக்கு வராவிட்டால் இலங்கையின் அமைவிடம் காரணமாக பூகோள அரசியல் உந்துசக்தியாக அமைந்து சர்வதேசம் தலையீடு செய்து இன நெருக்கடியை இன்னும் வலுப்படுத்த கூடிய வாய்ப்புக்கள் உள்ளது. இதற்கு சந்தர்ப்பம் கொடுக்காமல் இலங்கைத் தேசமாகிய நாம் ஒன்று கூடி 100 ஆவது சுதந்திரத்திற்கு முன்னர் அதிகாரத்தைப் பகிர்ந்து கொண்டு நல்லிணக்கத்துடன் அபிவிருத்தி செய்து ஆசியாவில் வல்லரசாக மாற வழி வகுக்க வேண்டும்-என்றார்.(அ)



# நாவற்காடு நாமகள் வித்தியாலய மாணவிகள் கர்நாடக சங்கீதத்தில் தேசிய மட்டச் சாதனை!

மட்டக்களப்பு, நவ. 25

அகில இலங்கை கர்நாடக சங்கீத தேசிய மட்டப் போட்டியில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட நாவற்காடு நாமகள் வித்தியாலய மாணவிகள் சாதனையை நிலைநாட்டியுள்ளனர்.

இதற்கமைய இடைநிலைப் பிரிவில் மு.கதுர்ஸ்ணா என்ற மாணவியும், மேற்பிரிவில் சி.மாதங்கி என்ற மாணவியும் முதலிடத்தைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களை மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்விப்பணிப்பாளர் யோ.ஜெயச்சந்திரன், பிரதிக்கல்விப் பணிப்பாளர் ந.குகதாசன் ஆகியோர் நேரடியாக பாடசாலைக்கு சென்று குறித்த மாணவர்களை பாராட்டி பரிசில் வழங்கி கௌரவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கஞ்சாவுடன் கைதானவருக்கு மறியல்

அம்பாறை, நவ. 25

கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட நபரை டிசம்பர் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா உத்தரவிட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பதூர்நகர் பிரதேசத்தில் 324 கிராம் மற்றும் 94 மில்லிகிராம் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இச்சந்தேக நபர் கஞ்சா வைத்திருந்தமை தொடர்பாக அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து குறித்த பிரதேசத்திற்கு சென்ற பொலிஸார் நபரை கைது செய்து நேற்று வியாழக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோதே இச்சந்தேக நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (அ)

# தாய்லாந்துக்கு பறந்தார் கிழக்கு ஆளுநர் செந்தில்

திருமலை, நவ. 25

தாய்லாந்தில் இடம்பெறவிருக்கும் 2023 யிற்கான உலக இந்து காங்கிரஸ் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான் பங்கேற்க நேற்று முன் தினம் தாய்லாந்துக்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

நேற்று முதல் தாய்லாந்தில் நடைபெறும் உலக இந்து காங்கிரஸ் ஒன்றுகூடல் நிகழ்வில் இந்தியா, அமெரிக்கா, நோர்வே, கனடா, ஜெர்மன், அவுஸ்ரேலியா, கென்யா, கத்தார் போன்ற 100 இற்கும் மேற்பட்ட நாடுகளின் இராஜதந்திரிகள், அரசியல் தலைமைகள், பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளனர். (அ)

# 22 மில்லியன் ரூபா செலவில் வாகரையில் அபிவிருத்திகள்

## மக்கள் பாவனைக்காக கையளிப்பு

மட்டக்களப்பு, நவ. 25

கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலக பிரிவில் 22 மில்லியன் செலவில் அமைக்கப்பட்ட 16 கிரெவல் வீதிகள் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டதுடன் நீர்வழங்கல் திட்டமும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மணல் வீதிகளற்ற கிராமங்கள் எனும் கருத்திட்டத்திற்கமைய மாவட்டம் பூராகவுமுள்ள பல வீதிகள் புனரமைக்கப்பட்டு வரும் நிலையில் யுத்தத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டு பொருளாதார ரீதியில் சற்று பின்னடைவில் காணப்படும் கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேசத்தின் உட்கட்டுமானங்களை விருத்திசெய்யும் முகமாக அங்கு அமைக்கப்பட்ட 16 கிரெவல் வீதிகளையும் நீர்வழங்கல் திட்டத்தினையும் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கும் நிகழ்வு மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் இடம்பெற்றது.

அதற்கமைய கோறளைப்பற்று வடக்கு, புனாணை கிழக்கு கிராமசேவையாளர் பிரிவில் புனரமைக்கப்பட்ட 2ஆம் குறுக்கு விவேகானந்தா வீதி, 6ஆம் குறுக்கு காந்தன் வீதி, 5ஆம் குறுக்கு வள்ளுவர் வீதி, 7ஆம் குறுக்கு தம்பிமுத்து வீதி, 8ம் குறுக்கு வேலுப்பிள்ளை வீதி, தேவாலய வீதி, இணைப்பு வீதி,1ஆம் குறுக்கு வீதி, 2ஆம் குறுக்கு வீதி, 3ஆம் குறுக்கு வீதி, 5ஆம் குறுக்கு வீதி, 4ஆம் குறுக்கு வீதி, 8ஆம் குறுக்கு வீதி மற்றும் வட்டவான் கிராம சேவகர் பிரிவில் அமைக்கப்பட்ட துறையடி வீதி, சித்தி விநாயகர் வீதி, பொதுக்கட்டட குறுக்கு வீதி என்பன சுமார் 22 மில்லியன் செலவில் கிரெவல் வீதிகளாக செப்பனிடப்பட்டு மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

அதனுடன் இணைந்ததாக சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட வட்டவான் புதிய கிராம மக்கள் மிகநீண்ட காலமாக எதிர் நோக்கி வந்த குடிநீர் பிரச்சனைக்கு தீர்வாக நீர் வழங்கல் திட்டத்தினையும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினூடாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுகளில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்ஷினி சிறீகாந்த், கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலாளர் ஜீ.அருணன், மாவட்ட



செயலக பொறியியலாளர் சுமன், உதவிப் பிரதேச செயலாளர் பிரணவன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள் ஜதீஷ்குமார் மற்றும் நிர்மல், கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலக பிரிவினுடைய உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சுதர்ஷன், இராஜாங்க அமைச்சரின் இணைப்புச் செயலாளர் ஆறுமுகம் தேவராஜ், மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவரின் தனிப்பட்ட செயலாளர் தம்பிராஜா தஜிவரன், நவரெத்தினம் திருநாவுக்கரசு உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# போர் நிறுத்தத்துக்கும் இடையே இஸ்ரேல் இராணுவம் தாக்குதல்!

**சுமார் 30பேர் உயிரிழப்பு!!**

ஜெருசலேம், நவ. 25

**பலஸ்தீனக் குழுவிற்கும் இஸ்ரேலுக்கும் இடையே திட்டமிடப்பட்ட போர்நிறுத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளபோதும், வடக்கு காஸாவில் உள்ள ஜபாலியா அகதிகள் முகாமில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்த பாடசாலை மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் சுமார் 30 பேர் கொல்லப்பட்டதாக ஹமாஸ் கூறியுள்ளது.**

**பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. நிவாரண மற்றும் வேலை முகமையால் நடத்தப்படும் அபு ஹூசைன் பாடசாலையின் மீது நடந்த தாக்குதலில் 27 பேர் கொல்லப்பட்டதாக காசா சுகாதார அமைச்சகம் அறிவித்தது.**

இங்கு காசாவின் பிற பகுதிகளில் வன்முறை மற்றும் தீவிர குண்டுவெடிப்பில் இருந்து இடம்பெயர்ந்த பாலஸ்தீனியர்கள் தஞ்சமடைந்துள்ள பகுதியாகும்.

வடக்கு காசாவில் உள்ள இந்தோனேசிய மருத்துவமனையின் பிரதான நுழைவாயில் மற்றும் மின் உற்பத்தியாளர்களைக் குறிவைத்து இஸ்ரேலியப் படைகள் புதிய தாக்குதல்களை ஆரம்பித்துள்ளதாக அறிய முடிகின்றது.

200க்கும் மேற்பட்ட நோயாளிகள், மருத்துவ ஊழியர்கள் மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் தற்போது பீட் லஹியாவில் உள்ள மருத்துவமனையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், இஸ்ரேலிய போர் விமானங்கள், தெற்கு காசா பகுதியில் உள்ள கான் யூனிஸில் ஷேக் நாசர் சுற்றுப்புறத்தைத் தாக்கின, இதில் குறைந்தது ஐந்து பேர் கொல்லப்பட்டனர் மற்றும் டசன் கணக்கானவர்கள் காயமடைந்தனர் என்று அதிகாரப்பூர்வ பாலஸ்தீனிய செய்தி



நிறுவனமான வஃபா தெரிவித்துள்ளது.

வடக்கு காசாவில் ஷேக் ரத்வான் பகுதியில் உள்ள குடியிருப்பு வீடு மீது இஸ்ரேலியப் படைகள் நடத்திய தாக்குதலில் குறைந்தது 10 பேர் கொல்லப்பட்டதாகவும் அது தெரிவித்துள்ளது.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில், 12 வயதான முகமது இப்ராஹிம் புவாட் எடெலி இஸ்ரேலியப் படைகளால் சுட்டுக் கொல்லப்பட்டதாக பலஸ்தீன அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்த சம்பவம் ஒக்டோபர் 7 முதல் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் கொல்லப்பட்ட பாலஸ்தீனியர்களின் எண்ணிக்கையை 229 ஆகக் கொண்டு வந்தது, அவர்களில் 52 பேர் குழந்தைகள் ஆவர்.

பலஸ்தீன அதிகாரிகளின் கூற்றுப்படி, இஸ்ரேலின் இடைவிடாத குண்டுவெடிப்புகளில் காசாவில் 14,800க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். இஸ்ரேலில், ஹமாஸின் தாக்குதல்களால் உத்தியோகபூர்வ இறப்பு எண்ணிக்கை சுமார் 1,200ஆக உள்ளது. (அ)



# முதல் கட்டமாக ஒரே குடும்பத்தில் 13 பணையக் கைதிகள் விடுவிப்பு

ஜெருசலேம், நவ. 25

இஸ்ரேல் - காஸா போர் நிறுத்தத்தின் முதல் கட்டமாக ஒரே குடும்பத்தை சேர்ந்த 13 பணையக் கைதிகள் விடுவிக்கப் படவுள்ளனர்.

இஸ்ரேல்-ஹமாஸ் இடையே போர் தொடங்கி 45 நாட்களை கடந்து விட்டது. இந்த போரில் பெண்கள், குழந்தைகள் உட்பட 15 ஆயிரம் பேர் வரை பலியாகி விட்டனர்.

மனிதாபிமான அடிப்படையில் இஸ்ரேல் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என உலக நாடுகள் கோரிக்கை விடுத்திருந்த நிலையில், கத்தாரில் நடைபெற்ற அமைதிப் பேச்சில் நான்கு நாட்கள் போர் நிறுத்தத்திற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

அதன்படி குழந்தைகள், பெண்கள் உள்ளிட்ட 50 பேரை விடுவிக்க ஹமாஸ் அமைப்பு ஒப்புக்கொண்டுள்ளது.

இதற்கு ஈடாக இஸ்ரேல் சிறையில் உள்ள 150 பலஸ்தீனர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என இஸ்ரேல் அறிவித்தது.

காஸாவில் நேற்று முதல் போர் நிறுத்தம் செய்வதாக இருந்தது. ஆனால், சில காரணங்களால் இதில் தாமதம் ஏற்பட்டது.

“இதையடுத்து இன்று காலை முதல் போர் நிறுத்தம் அமலுக்கு வருவதாகவும், இன்று மாலை முதல் பிணைய கைதிகளை விடுவிக்கும் பணி தொடங்கும்” என்றும் கத்தார் நாட்டின் வெளியுறவுதுறை அமைச்சின் செய்தி தொடர்பாளர் மஜித் அல் அன்சார் தெரிவித்தார்.

இதன் முதல்கட்டமாக நேற்று ஒரே குடும்பத்தை சேர்ந்த பெண்கள், குழந்தைகள் உள்பட 13 பணையக் கைதிகள் விடுவிக்கப்படலாம் எனக் கூறப்பட்டது.

பின்னர் தொடர்ந்து 4 நாட்கள் ஹமாஸ் அமைப்பினர் பிடியில் உள்ள மொத்தம் 50 பிணைய கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)



# காஸா எல்லைக்குள் எரிவாயு வாகனங்கள்!

ஜெருசலேம், நவ. 25

காஸாவின் எல்லைக்குள் எரிபொருள் மற்றும் எரிவாயு கொள்கலன்கள் தாங்கிய மூன்று வாகனங்கள் உள்நுழைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், எரிபொருள் மற்றும் எரிவாயு தாங்கிய வாகனங்கள் மேலும் சில நாட்களில் காஸாவிற்கு செல்லவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காஸாவில் இடம்பெற்ற தாக்குதல் காரணமாக எரிபொருள் மற்றும் எரிவாயுவுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, அங்கு மருத்துவ சேவைகள் உள்ளிட்ட அடிப்படை சேவைகள் பாதிக்கப்பட்டு, வைத்தியசாலைகளில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டிருந்த பலர் உயிரிழந்தனர்.

இதன்காரணமாகவே, குறித்த வாகனங்கள் காஸாவிற்கு வருகைத்தந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஹமாஸ் மற்றும் இஸ்ரேலினால் ஒப்பந்தம் செய்யப்பட்ட நான்கு நாள் காஸா போர்நிறுத்தம் நேற்று முதல் அமுலுக்கு வந்தது. (அ)

# பல்வேறு வாக்குறுதிகளுடன் நியூஸிலாந்தில் புதிய அரசு!

வெலிங்டன், நவ. 25

நியூஸிலாந்தின் தேசியக் கட்சி மற்ற இரண்டு வலதுசாரிக் கட்சிகளுடன் ஒரு கூட்டணி அரசாங்கத்தை அமைக்க ஒப்புக் கொண்டுள்ளது.

பொதுத் தேர்தல்களை நடத்தி கிட்டத்தட்ட ஆறு வாரங்களுக்குப் பிறகு கிளாசிக்கல் லிபரல் ஏ.சி.டி. மற்றும் ஜனரஞ்சகமான நியூஸிலாந்து ஃபர்ஸ்ட் கட்சிகளுடன் கூட்டணியில் ஆட்சியமைப்பதற்கான ஒப்பந்தத்தில் மத்திய-வலது தேசியக் கட்சி நேற்று வெள்ளிக்கிழமை கையெழுத்திட்டுள்ளது.

தேசியக் கட்சியின் தலைவர் கிறிஸ்டோபர் லக்சன் மூன்று கட்சிகளும் கூட்டணி அமைக்க ஒப்புக்கொண்டதாக நேற்று அறிவித்ததைத் தொடர்ந்து முறையான உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ், முன்னாள் விமான நிறுவன நிர்வாகியான லக்சன் திங்கள்கிழமை முதல் பிரதமராகவும், நியூஸிலாந்து முதல் தலைவர் வின்ஸ்டன் பீட்டர்ஸுடன் வெளியு



றவு அமைச்சராகவும் பணியாற்றுவார்.

பீட்டர்ஸ் மற்றும் ஏ.சி.டி. இன் டேவிட் சீமோர் ஆகியோர் துணைப் பிரதமரின் பங்கைப் பகிர்ந்து கொள்வார்கள், நியூஸிலாந்து முதல் தலைவர் பாராளுமன்றக் காலத்தின் பாதியிலேயே தனது பொறுப்பை ஒப்படைப்பார்.

தனிப்பட்ட வருமான வரிகளை குறைப்பது, இரண்டு ஆண்டுகளுக்குள் மேலும் 500 பொலிஸாருக்கு பயிற்சி அளிப்பது மற்றும் பணவீக்கத்தை குறைப்பதில் மட்டுமே கவனம் செலுத்த மத்திய வங்கியின் ஆணையை மாற்றி எழுதுவது போன்ற உறுதிமொழிகள் கூட்டணியின் தேர்தல் அறிக்கையில் அடங்கும்.

மத்திய-இடது தொழிற்கட்சியின் ஆறு ஆண்டுகால ஆட்சிக்குப் பிறகு, நியூஸிலாந்தர்கள் ஒக்டோபர் 14ஆம் திகதி, ஆட்சி மாற்றத்திற்கு வாக்களித்த பின்னர், பல வாரங்கள் நடைபெற்ற தீவிரமான பேச்சுவார்த்தைகளுக்கு பிறகு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. (அ)

# ஜூலி சங்கின் தலையீடுகள் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்!

**சரத் வீரசேகர சுட்டிக்காட்டு**

கொழும்பு, நவ. 25

**இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் நாட்டின் உள்ளக விவகாரங்கள் தலையிடுவது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும். ஆகவே உரிய நடவடிக்கை எடுங்கள் என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரிடம் வலியுறுத்தினேன் என தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவரும் முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும் அரச தரப்பு எம்.பி.யுமான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.**



அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கிற்கு ஆதரவாக செயற்படுபவர்களுக்காக பொலிஸாரை காட்டிக் கொடுக்க முடியாது என்றும் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை சிறப்புரிமை மீறல் பிரச்னையை முன்வைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வை குழு தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தவறான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார். குழுவின் அனுமதியுடனேயே 3 முக்கிய பரிந்துரைகளை பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரிடம் முன்வைத்தேன்.

பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவின் உறுப்பினராக பதவி வகிக்கிறார். ஆனால் அவர் குழுவின் செயற்பாடுகளுக்கு எதிராக செயற்படுகிறார். குழுவில் முன்னிலையாகும் அரச அதிகாரிகளை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் செயற்படுகிறார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் நாட்டின் உள்ளக விவகாரங்கள் தலையிடுவது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் ஆகவே உரிய நடவடிக்கை எடுங்கள் என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரிடம் வலியுறுத்தினேன்.

அமெரிக்க தூதுவருக்கு சார்பாக செயற்படும் சந்திம வீரக்கொடி போன்றவர்களுக்காக பொலிஸாரை காட்டிக் கொடுக்க முடியாது. தேசிய பாதுகாப்பு தொடர்பில் அடிப்படை அறிவில்லாத சந்திம வீரக்கொடி தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வை குழுவின் உறுப்பினராக உள்ளதால் பல முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. எனவே குழு உறுப்பினர் பதவியில் இருந்து அவரை உடனடியாக நீக்குமாறு வலியுறுத்துகிறேன்-என்றார். (அ)



# வதிரியில் திருட்டு

யாழ்ப்பாணம், நவ. 25

வதிரி அரசடிப் பகுதியில் உள்ள, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை ஒன்றில் கூரை பிரித்து திருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவு இந்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கட்டைவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்குரிய கிளையை நேற்று முன்தினம் மாலை மூடிவிட்டுச் சென்ற கிளை முகாமையாளர், நேற்றுக் காலை கிளையை திறக்க சென்றபோது கூரை உடைக்கப்பட்டு திருட்டு மேற்கொள்ளப்பட்டமை தெரியவந்துள்ளது.

அதனையடுத்து, நெல்லியடி பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர். (அ)

# எந்த நாட்டிலிருந்தும் இலங்கைக்கு ஆய்வு கப்பல்கள் வரவேற்கப்படும்

**ஜனாதிபதி ரணில் கூறுகிறார்**

கொழும்பு, நவ. 25

சீனா உட்பட எந்தவொரு நாட்டிலிருந்தும் எந்தவொரு ஆராய்ச்சி மற்றும் ஆய்வுக் கப்பலையும் இலங்கை வரவேற்கும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்திய நிறுவனத்துக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

சீனாவின் யுவான் வாங் 5 மற்றும் ஷி யான் 6 ஆகிய கப்பல்கள் அண்மையில் மேற்கொண்ட துறைமுக அழைப்புகளுக்கு பதிலளித்த ரணில் விக்கிரமசிங்க, அந்தக் கப்பல்கள் உளவு கப்பல்கள் என கூறுவதற்கு ஆதாரம் இல்லை என தெரிவித்துள்ளார்.

"உளவு கப்பல் என்றால் என்ன என்பது பெரிய கேள்விக்குறி. இவை சிவிலியன் கப்பல்கள், ஆனால் சிக்கல்கள் இருந்தால், உளவு கப்பல்கள் இருந்தால், அவற்றை உள்ளே வர அனுமதிக்கமாட்டோம். ஆனால் ஆய்வைப் பொருத்தவரை, நாங்கள் அனுமதிப்பது மட்டுமல்ல. சீன கப்பல்கள், ஆனால் ஏனைய கப்பல்களும் இலங்கைக்கு வருகின்றன என்பதை யாரும் வெளிச்சம் போட்டுக் காட்டவில்லை" என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மேலும், "ஒவ்வொரு முறை சீன கப்பல் வரும்போதும் எங்களுக்கு அதிக விளம்பரம் கிடைக்கும். ஆனால், வேறு நாட்டிலிருந்து கப்பல், ஆய்வுக் கப்பல் வந்தால் புறக்கணிக்கப்படுகிறோம்" என்றார் அவர். (அ)

# புதிய ஏற்றுமதித்துறை குறித்து கவனம் செலுத்தப்படவேண்டும்!

**ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு**



கொழும்பு, நவ. 25

நாட்டின் ஏற்றுமதி பொருளாதாரத்தைக் கட்டமைப்பதற்கு தற்போதுள்ள ஏற்றுமதிச் செயற்பாடுகளை வலுவூட்டுவது மாத்திரம் போதுமானதல்லவென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஆகையால், புதிய ஏற்றுமதித்துறை தொடர்பில் கவனம் செலுத்தவேண்டியது அவசியமெனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற 25 ஆவது ஏற்றுமதிக்கான ஜனாதிபதி விருது வழங்கும் விழாவில் கலந்துகொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அதற்காக புதிய முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுக்க வேண்டுமெனவும் அவர்களுக்கான வசதிகளை அரசாங்கம் வழங்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அத்துடன், தற்போது பாராளுமன்றில் முன்மொழியப்பட்டுள்ள பட்ஜெட். இலங்கை கடன் பெற்றுக்கொள்ளாத முதலாவது பட்ஜெட்டாகும்.

வற் என்ற பெறுமதி சேர் வரியை அதிகரித்து இலங்கை கடன் பெற்றுக்கொள்ளாமல் செலவுகளை நிவர்த்தி செய்யும்.

சிலர் எம்மை விமர்சித்தாலும் எதிர்காலத்தில் அது தொடர்பான அவர்களுக்கு புரிதல் ஏற்படும்.

அத்துடன், நமது ஏற்றுமதியை அதிகரிக்கவேண்டியது அவசியமாகும்.

தொழிற்சாலைத் துறையினையும் வலுவூட்டவேண்டும்.

பட்ஜெட்டில், முதல் முறையாக சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தேசிய வலுவூட்டலுக்காக தேசிய வலுவூட்டல் ஆணைக்குழுவை நிறுவ எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

அத்துடன், புதிய ஏற்றுமதித் துறைகளில் கவனம் செலுத்த வேண்டும்.

அதற்குப் புதிய முதலீடுகளை பெற்றுக்கொள்ள வேண்டும்-என்றார். (அ)

# எமது இனத்துக்காக போராடியவர்களின் சுவடுகள் அழிக்கப்படுவது மனவேதனை!

**சபையில் இரா.சாணக்கியன் சுட்டிக்காட்டு**

கொழும்பு, நவ. 25

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் அமைக்கப்பட்டுவந்த நினைவு தூபிகள் அகற்றப்பட்டத்தை நான் மிகவும் வன்மையாக கண்டிக்கின்றேன் என சாணக்கியன் பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந் நாட்டில் மக்களின் வரிகளை பெற்றுக்கொண்டு மாளிகைகளும் கோபுரங்களும் கட்டிவைத்துள்ள இராணுவ தளபதிகள் மற்றும் இராணுவ மேலதிகாரிகளின் பாதுகாப்புக்கென பாரிய நிதி செலவிடப்படுகின்றது.

இருப்பினும் இராணுவச் சிப்பாய்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் யுத்தம் முடிந்த பின்னும் கோட்டாபயவினால் மேலதிகமாக இணைக்கப்பட்டு அவர்கள் மேசன், தச்சுத்தொழில் மற்றும் கூலி வேலைகளுக்காக அமர்த்தப்பட்டார்கள்.



இலங்கை மக்கள் அவர்களின் வேதனத்துக்கும் சேர்த்து தற்பொழுது பாரிய வரி செலுத்தும் நிலைமைக்கு தள்ளப்படுள்ளார்கள்.

இருப்பினும் இவர்களும் இப் பொருளாதார நெருக்கடியில் பாதிக்கப்படுள்ளனர். ஆனால் இவர்களின் தற்போதைய செயல்பாடுகள் இன விரோதத்தை மென்மேலும் தூண்டும் விதமாகவும் அவமரியாதை செய்யும் விதமாகவும் அமைந்துள்ளன.

தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் அமைக்கப்பட்டு வந்த நினைவுத் தூபிகள் அகற்றப்பட்டதை நான் மிகவும் துக்ககரமான சம்பவமாக கருதுகின்றேன்.

ஓர் இனத்துக்காக இனத்தின் விடுதலைக்காக போராடிய வீரர்கள் துயிலும் இந்த இல்லங்களை அழிப்பது எமது சமூகத்துக்கு மிகவும் மன வேதனையளிப்பதாகும். அவர்களின் பெற்றபெற்றோர்கள் மற்றும் சகோதரர்கள் உறவினர்கள் பிள்ளைகளின் மனநிலையை யோசித்துப் பாருங்கள்-என்றார். (அ)

## நிகழ்நிலை....

செயல்படுதலுக்கான உரிமைகளை பாதுகாப்பதற்கான விசேட பிரதிநிதி கிளமண்ட் வோலே மற்றும் தனியார் உரிமைகள் தொடர்பான விசேட பிரதிநிதி அனா பிராயன் ஆகியோரால் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் தொடர்பிலான உலகளாவிய பிரகடனம், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச பிரகடனத்தினால் பாதுகாக்கப்பட்ட தனிநபருக்கான உரிமைகள், கருத்து வெளியிடுவதற்கு காணப்படும் உரிமை மற்றும் அமைதியாக ஒன்றுகூடுதலுக்கான உரிமை என்பன இந்த இரண்டு சட்டமூலங்களாலும் மீறப்படுவதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட இரு உலகளாவிய பிரகடனங்களிலும் இலங்கை கைச்சாத்திட்டுள்ளதாக ஐ. நா. விசேட பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

உத்தேச நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தில் கூறப்பட்டுள்ள பல விடயங்கள், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான உலகளாவிய பிரகடனங்களின் மூலம் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை நிறைவேற்றவில்லை எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

உத்தேச சட்டமூலங்களின் ஊடாக நிகழ்நிலையில் கருத்து வெளியிடுவதற்கான உரிமை மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதுடன், கடுமையாக அரசாங்கத்தை விமர்சிக்கும் ஊடகவியலாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் சிவில் செயல்பாட்டாளர்களுக்கு எதிராக தடைகளும் அச்சுறுத்தல்களும் விடுக்கப்படக்கூடும் என ஐ.நா. விசேட பிரதிநிதிகளின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் வாழும் அனைத்து தரப்பினர் மற்றும் புலம்பெயர் தமிழர்களை இலக்கு வைத்து இந்த சட்டமூலங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவை வெவ்வேறு துறைகளை சேர்ந்தோர் கருத்து வெளியிடுவதற்கு காணப்படும் உரிமை மீது எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தேச ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் சட்டமூலத்திற்கமைய ஆணைக்குழுவை நியமிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டால், அரசாங்கம் தொடர்பில் பக்கசார்பற்ற முறையில் செயற்படும் ஊடக நிறுவனங்களை தண்டிக்கவோ அல்லது உரிமத்தை இரத்து செய்யவோ நாட்டின் நிர்வாக அதிகாரிகளுக்கு வாய்ப்பு கிடைக்குமென ஐ.நா. விசேட பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த கண்காணிப்பு செயல்பாடு சுதந்திரமான மற்றும் அழுத்தங்களுக்கு உட்படாத அமைப்பாக இருக்க வேண்டும் எனவும் அதில் அரசியல் தொடர்புகள் இருக்கக்கூடாது எனவும் அவர்கள் தமது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளனர்.

இந்த இரு சட்டமூலங்களையும் திரும்பப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லது பொதுமக்களின் கருத்தைக் கேட்டறிந்த பின்னர் முறையாக மறுபரிசீலனை செய்ய வேண்டுமென ஐ. நா. விசேட பிரதிநிதிகள் குறிப்பிட்டுள்ளனர். (அ)

## மாவீரர் நினைவே...

குறித்த பொருட்களை யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழகத்தின் பிரதான நுழைவாயில் அருகில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள சேகரிப்பு கூடத்தில் வழங்க முடியும் என யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

நினைவேந்தலுக்கு தேவையான கற்பூரம், எண்ணெய், சுட்டி, திரி என்பவற்றை நவம்பர் 27 ஆம் திகதி வரை தினமும் குறித்த சேமிப்புக் கூடத்தில் வழங்க முடியுமெனவும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது. (அ)

## கொக்குத்தொடு....

கனகசபாபதி வாசுதேவா தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு பணியானது ஐந்தாவது நாளாக நேற்று இடம்பெற்று நிறைவடைந்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

ஐந்தாவது நாளாக தொடரும் கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வின்போது நான்கு மனித எலும்புக்கூடுகளின் எச்சங்கள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் துப்பாக்கிச் சன்னங்களும் குண்டு சிதறல்களும் மீட்கப்பட்டுள்ளது. அத்துடன் பேனா மாக்கர் ஒன்றும் எடுக்கப்பட்டுள்ளது.

இன்றையதினம் ஸ்கானர் மூலம் இந்த புதைகுழியானது எவ்வளவு தூரம் பரந்து வியாபித்துள்ளது என பரிசோதனை செய்யப்பட்டதுச். இதன் முடிவுகள் நாளை (இன்று) அகழ்வு பரிசோதனை பணி நிறைவுற்ற பிற்பாடே கிடைக்கப் பெறும்.

இவ் புதைகுழியானது வீதியின் ஊடாகவும் மற்றைய பகுதிகள் ஊடாகவும் செல்லக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. எனினும் பரிசோதனையின் பின்னரே இறுதி முடிவுகள் என்னால் உறுதியாக கூறமுடியும்- என்றார். (அ)

## நிறைவேற்று....

முறைமையை இல்லாது செய்ய சட்டத்தரணிகள் சங்கத்தின் ஆவணத்தில் நான் கையெழுத்திட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

ஆனால், சட்டத்தரணிகள் சங்கள் இது தொடர்பாக எனக்கு அறிவிக்கவும் இல்லை, அழைக்கவும் இல்லை, நான் எந்தவோர் ஆவணத்திலும் கையெழுத்திடவும் இல்லை.

எதிர்க்கட்சித் தலைவர்கள் சிலர் இதில் கையெழுத்திட்டிருந்தாலும், அந்த ஆவணம் அவர்களின் கட்சி மத்திய குழுக்கூட்டத்தில் கூட இதற்கு இணக்கம் வெளியிடப்படவில்லை.

அப்படியிருக்கையில், நான் கைச்சாத்திட்டேன் என எவ்வாறு கூற முடியும்? சட்டத்தரணிகள் சங்கத்துடன் சில கட்சித் தலைவர்கள் பேச்சு நடத்தினார்கள்.

ஆனால், அந்தச் சங்கம் எம்முடன் கலந்துரையாட பாராளுமன்றுக்கு வருகைத் தந்திருக்க முடியும். நான் யாருடனும் பேசவில்லை-என்றார். (அ)

## மாவீரர் தினத்தை...

வடக்கு மற்றும் கிழக்கில் இம்மாதம் 27ஆம் திகதி நடத்தப்படவுள்ள சட்ட விரோத மாவீரர் நிகழ்வுகளுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்த உத்தரவு பிறப்பிக்குமாறு இராணுவத்தின் ஓய்வுபெற்ற புலனாய்வு அதிகாரியால் சமர்ப்பிக்கப்பட்ட மனுவொன்றின்போது பொலிஸ் மா அதிபர் மற்றும் பயங்கரவாத தடுப்பு பணியகத்தின் பணிப்பாளர் சார்பில் ஆஜரான சிரேஷ்ட அரச சட்டத்தரணி ஷமிந்த விக்ரம இந்த உறுதிமொழியை வழங்கினார். (அ)

## மனித புதைகுழி....

வருகின்றது.

இந்நிலையில், நேற்று தனியார் நிறுவனம் ஒன்றின் ஊடாக தற்போது தோண்டப்பட்டுள்ள மனித புதைகுழியானது எவ்வளவு தூரம் வியாபித்து இருக்கின்றது என்ற சோதனை விசேட ஸ்கான் இயந்திரம் மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, தோண்டப்பட்ட இடத்துக்கு வெளியிலும் மனித எச்சங்கள் இருப்பதற்கான சமிக்ஞைகள் தென்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பான உத்தியோகபூர்வமான அறிக்கை இன்று அல்லது நாளை வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)



வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸின் தாயார் காலமானார். மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவருக்கு இறுதிமரியாதை செலுத்தினார்...!

# "பாதுகாப்பு அமைச்சுக்கு பெருமளவு நிதி எதற்கு?"

கொழும்பு, நவ. 25

போர் முடிந்து 15 வருடங்களுக்குப் பின்னரும் யுத்தம் இல்லாத சூழலில் தொடர்ந்தும் நியாயப்படுத்த முடியாத அளவுக்கு பாதுகாப்பு அமைச்சுக்கு நிதி ஒதுக்கப்படுகின்றது என்றால் அதைப் பற்றியும் ஆழமாகச் சிந்திக்க வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றில் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மத்திய கிழக்கில் இஸ்ரேலுக்கும் காஸாவுக்கும் இடையில் நடைபெறுகின்ற மோதல் தொடர்பாக இரண்டு கிழமைகளுக்கு முன்பதாக இதே பாராளுமன்றத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

அந்தத் தீர்மானம் ஒரு போர் நிறுத்தத்தை வலியுறுத்தியும், பலஸ்தீன மக்களுடைய பிரச்சனை பேச்சு ஊடாகத் தீர்க்கப்பட வேண்டும் என்றும் நிறைவேற்றப்பட்டது.

பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்களோடு ஐ.நாவுடைய செயலாளர் நாயகத்துக்கும் கடிதம் ஒன்று எழுதப்பட்டது. அந்தக் கடிதத்திலும் இங்கு நடைபெற்ற விவாதத்திலும் மிகத் தெளிவாக காஸாவில் நடைபெறுவது பலஸ்தீன மக்களின் இனப்படுகொலை என்ற விடயம் வலியுறுத்தப்பட்டிருந்தது.

அங்கு நடைபெறுவது இனப்படுகொலை என்பதை நியாயப்படுத்துவதற்குரிய பல அம்சங்கள் பட்டியிலிடப்பட்டிருந்தது. அந்தப் பட்டியலில் கூறப்பட்ட விடயங்கள் அனைத்தும் இலங்கையில் வடக்கு, கிழக்கில் 15 வருடங்களுக்கு முன்னர் நடைபெற்றிருந்தவையாகும்.

இங்கு இனப்படுகொலையை செய்வித்த கருவி இந்த முப்படைகளும் பொலிஸூம் ஆகும் - என்றார். (அ)

## 2ஆம் கட்ட....

குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், குறித்த விடயம் தொடர்பான பேச்சுகளில் இலங்கை தற்போது முன்னேற்றம் அடைந்து வருவதாகவும் மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்தார். (அ)

## ஐந்து பொலிஸாரை....

வட்டுக்கோட்டை பொலிஸாரினால் நாகராசா அலெக்ஸ் எனும் இளைஞன் கைது செய்யப்பட்டு, சித்திரவதைக்கு உள்ளான நிலையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை உயிரிழந்தமை தொடர்பிலான வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

நீதிமன்ற உத்தரவு தொடர்பில் சிரேஷ்ட சட்டத்தரணி ந. சிறீகாந்தா தெரிவிக்கையில்-

மரண விசாரணையின் அடிப்படையில் யாழ்ப்பாணம் நீதிவான் சில கட்டளைகள் வழங்கியது.

நேற்று ஐந்து சாட்சியங்கள் தமது சாட்சிகளை பதிவு செய்தனர். அதில் மூன்றாம் சாட்சி, இறந்தவருடன் தானும் தாக்குதலுக்கு இலக்காகியதாக கூறியதை கொண்டு சாட்சி பெயர் குறிப்பிட்டு அடையாளம் கூறிய இரண்டு பொலிஸார் மற்றும் அங்க அடையாளங்களை கூறிய மூவர் என ஐவரையும் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ் அத்தியட்சகருக்கு கட்டளையிடப்பட்டது.

பொலிஸ் நிலையத்திற்கு வெளியில் தாக்கப்பட்டதாக கூறியதையடுத்து, குறித்த இடங்களை விஞ்ஞான ரீதியாக அடையாளம் காண சாட்சியை அழைத்து செல்ல உதவிய பொலிஸ் அத்தியட்சகரின் விண்ணப்பத்தமைக்கு ஏதுவாக நீதிமன்றம் கட்டளையிட்டது.

இதன்போது சாட்சியின் பாதுகாப்பு கருதி இரண்டு சட்டத்தரணிகள் உடன் செல்ல நீதிமன்றம் அனுமதியளித்தது.

சாட்சியமளித்த சட்ட மருத்துவ அதிகாரி மயூதரன் காயத்தை விபரித்ததோடு காயம் காரணமாக சிறுநீரகம் பாதிக்கப்பட்டதே பிரதான காரணம் என கூறியதன் அடிப்படையில் நீதிமன்றம் மேற்குறித்த கட்டளையை வழங்கி இருக்கிறது.

மரண விசாரணைகளுக்கு பின்னர் சம்பந்தப்பட்ட பொலிஸார் நாட்டை விட்டு வெளியேறாத வகையில் பயணத் தடை விதிக்கப்பட்டது.

இதன்போது தங்களது விசாரணையில் நான்கு பொலிஸார் அடையாளம் காணப்பட்டதாக உதவி பொலிஸ் அத்தியட்சகர் நீதிமன்றத்தில் தெரிவித்ததுடன் சாட்சியின் அடையாளத்தை கொண்டு மேலும் ஒருவர் அடையாளம் காணப்பட்டார்.

இதுவொரு மனித உயிர் போக்கல் அல்லது ஆட்கொலை என்ற நிலைப்பாட்டுக்கு நீதிமன்றம் வந்துள்ளது.

குறித்த மரணம் தொடர்பில் நீதி நிலைநாட்டப்படும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. நேற்றைய நடவடிக்கையில் யாழ்ப்பாணம், வவுனியா என பல இடங்களில் இருந்தும் ஐம்பதுக்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் கலந்துகொண்டனர்.

விசாரணை தொடர்ந்து விரைவாக இடம்பெற ஏதுவாக எதிர்வரும் திங்கட் கிழமைக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது." என தெரிவித்தார். (அ)

ஈழநாடு Eelanadu

# நாட்டை விட்டு செல்லும் மருத்துவர்கள் எண்ணிக்கை குறைவடைந்து வருகிறது

## சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 25

நாட்டை விட்டு வெளியேறும் வைத்தியர்கள் மற்றும் ஆலோசகர்களின் எண்ணிக்கை மிதமான அளவில் குறைந்துள்ளதாக சுகாதார அமைச்சின் புதிய செயலாளர் வைத்தியர் பாலித மஹிபால தெரிவித்தார்.

சுகாதார அமைச்சில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய வைத்தியர் மஹிபால,

கடந்த இரண்டு முதல் மூன்று வாரங்களுக்கான தரவுகளை பரிசீலிக்கும் போது, நாட்டை விட்டு வெளியேறும் வைத்தியர்களின் கீழ்நோக்கிய போக்கு காணப்படுகிறது.

முதுகலைப் பயிற்சிக்காக வெளிநாடு சென்ற அந்த வைத்தியர்கள் நாடு திரும்பவே இல்லை என்ற போக்கை நாம் சில காலத்திற்கு முன்பு பார்த்தோம்.

ஒப்பீட்டளவில், வைத்தியர்கள் இப்போது திரும்பி வருகிறார்கள். உண்மையில், வேறு நோக்கங்களுக்காக நாட்டை விட்டு வெளியேறிய சிலவைத்தியர்கள், திரும்பி வருகிறார்கள்.

தற்போது தொழிற்சங்கங்கள் மற்றும் பிற பங்குதாரர்களுடன் இந்த விடயத்தை எவ்வாறு சிறந்த முறையில் தீர்க்க முடியும் என்பதைப் பார்க்கிறோம்.

ஒரு நிபுணரை உருவாக்க 8-10 ஆண்டுகள் ஆகும், அவர்களுக்காக அதிக பணம் செலவிடப்படுகிறது. எனவே, அவர்கள் நாட்டில் தங்கியிருப்பதை நாங்கள் உறுதி செய்ய வேண்டும்.-என்றார்.

இதேவேளை, சர்ச்சைக்குரிய இம்யூனோகுளோபுலின் மருந்தைப் பெற்றவர்களின் சகல விபரங்களையும் வழங்குமாறு சுகாதார அமைச்சு மாகாண சுகாதார பணிப்பாளர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கேள்விக்குரிய இம்யூனோகுளோபுலின் மருந்தைப் பயன்படுத்துவதால் இதுவரை எந்த வகையான சிக்கல்களையும் நாங்கள் இதுவரை தெரிவிக்கவில்லை. இருப்பினும், மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் மருந்து குறித்து மேலும் விசாரணை நடத்தி வருகிறது என்று அவர் தெளிவுபடுத்தினார். (அ)

# ஜனாதிபதி பதவியை வகித்தவர்கள் மீண்டும் பாராளுமன்றம் வரத் தடை!

## சட்டம் வேண்டும் என்கிறார் தயாசிறி ஜயசேகர

கொழும்பு, நவ. 25

**ஜனாதிபதி பதவியை வகித்தவர்கள் மீண்டும் பாராளுமன்றம் வருவதற்கு தடை விதிப்பதற்கான சட்டம் இயற்றப்பட வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர வலியுறுத்தினார்.**



பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவு -செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

"ஜனாதிபதிமார் மீண்டும் பாராளுமன்றம் வருவதை, சட்டம் இயற்றி தடை செய்ய வேண்டும். சிலவேளை ரணில் விக்கிரமசிங்க அடுத்த பொதுத்தேர்தலில் போட்டியிடுவாரா என தெரியவில்லை. ஜனாதிபதி பதவியை வகித்தவர்கள் மீண்டும் நாடாளுமன்றம் வருவது தவறான முன்னுதாரணமாகும்.

ஜே.ஆர். ஜயவர்தன, சந்திரிக்கா அம்மையார் போன்றோர் ஜனாதிபதி பதவியில் இருந்து விலகிய பின்னர் நாடாளுமன்றம் வரவில்லை." - எனவும் தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டார்.

அதேவேளை, உணவை வீணடித்தால் தண்டனை விதிப்பதற்கான சட்டமும் கொண்டுவரப்படவேண்டும். தமக்கு உண்ணக்கூடிய அளவுக்கு அதிகமாக பகிர்ந்து உணவை வீணடிப்பது ஏற்புடையது அல்ல. வெளிநாடுகளில் அவ்வாறு செய்தால் தண்டம் அறவிடப்படும்." - எனவும் தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டார். (அ)

# சித்தன்கேணி இளைஞன் கொலை வழக்கு; யாழ்.நீதிமன்றத்துக்கு பலத்த பாதுகாப்பு!

யாழ்ப்பாணம், நவ. 25

யாழ்ப்பாண நீதிமன்ற வளாகத்தின் பாதுகாப்பு நேற்று பலப்படுத்தப்பட்டிருந்தது. நீதிமன்ற வளாகத்துக்கு வெளியே பெரும் எண்ணிக்கையான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.



பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பின்னர் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு உயிரிழந்தார் எனக் கூறப்படும் சித்தங்கேணிப் பகுதியை சேர்ந்த நாகராசா அலெக்ஸ் எனும் இளைஞர் மரணம் தொடர்பான வழக்கு விசாரணைகள் யாழ்ப்பாண நீதிமன்றில் நேற்று இடம்பெற்றன.

இந்நிலையில் நீதிமன்ற வளாகத்தைச் சூழ பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

நேற்றுச் சிறைச்சாலை அத்தியட்சகர், சட்ட வைத்திய அதிகாரி மற்றும் கொலையான இளைஞருடன் கைதான மற்றைய இளைஞர் ஆகியோர் நீதிமன்றில் தோன்றி தமது சாட்சியங்களைப் பதிவு செய்தனர் என தெரிவிக்கப்பட்டது. (அ)

# ரூபா 100 கோடி இழப்பீடு கோரி ஷானி அபேசேகர மனு தாக்கல்!



கொழும்பு, நவ. 25

பொய் வழக்குகள் சுமத்தி சிறையில் அடைத்து நீதித்துறையை துஷ்பிரயோகம் செய்ததன் மூலம் தனது சுயமரியாதைக்கு இழுக்கு ஏற்படுத்தியவர்களிடமிருந்து ரூ.100 கோடி இழப்பீடு கோரி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர, கொழும்பு மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்ன, மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உள்ளிட்டவர்களிடம் இந்த நட்டஈட்டை மீளப் பெற்றுத்தருமாறு அவர் கோரியுள்ளார்.

பொலிஸ் மா அதிபர் சந்தன விக்கிரமரத்ன, மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் உதவி பொலிஸ் அத்தியட்சகர் நெவில் சில்வா, பொலிஸ் பொறுப்பதிகாரி ஜகத் நிஷாந்த மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சட்டத்தரணி மஞ்சுள பாலசூரியவின் ஊடாக தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவின் ஊடாக, கோடீஸ்வர வர்த்தகர் மொஹமட் ஷியாம் கொலையுடன் தொடர்புடைய துப்பாக்கிகள் தொடர்பில் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் அதிகாரிகள் தமக்கு எதிராக பழிவாங்கும் நோக்கில் விசாரணைகளை மேற்கொண்டதாக ஷானி அபேசேகர தெரிவித்துள்ளார்.

பொலிஸ் மா அதிபர் மற்றும் மேல்மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் ஆகியோரின் தீர்மானத்திற்கு அமைய இந்த விசாரணை நடத்தப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விசாரணைகளின் போது, கொழும்பு குற்றப்பிரிவு பொலிஸ் அத்தியட்சகர் நெவில் சில்வா மற்றும் பொலிஸ் பரிசோதகர் ஜகத் நிஷாந்த ஆகியோர் தனக்கு எதிராக பொய்யான வாக்குமூலங்களை வழங்குமாறு பல்வேறு நபர்களுக்கு அழுத்தம் கொடுத்ததாக ஷானி அபேசேகர தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, தான் கைது செய்யப்பட்டு கம்பஹா நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பல மாதங்களின் பின்னர் சட்டமா அதிபரின் அறிவுறுத்தலின் பேரில் விடுவிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இதன் மூலம், பிரதிவாதிகள் நீதித்துறை செயல்முறையை தவறாகப் பயன்படுத்தியுள்ளனர் மற்றும் தீங்கிழைக்கும் வகையில்செயற்பட்டு, தனது சுயமரியாதைக்கு இழுக்கு ஏற்படுத்தியதாக குறிப்பிட்டு, 100 கோடி ரூபா நட்டஈடு கோரி ஷானி அபேசேகர இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். (அ)

# 'அறகலய' போராட்டத்தின் ஊடாக பாதாள குழுக்களே தலைதூக்கின!

## டிரான் அலஸ் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 25

'அரகலய' போராட்டம் காலிமுகத்திடல் போராட்டத்தின் மூலம் நாட்டில் பாதாள உலகக் குழுக்களே அதிகரித்துள்ளன. அதேபோன்று போதைப்பொருள் பாவனையும் அதிகரித்துள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒரு வருட காலம் காலிமுகத்திடல் போராட்டம் மற்றும் அது தொடர்பான சம்பவங்கள் குறித்து பொலிஸாரால் முழுமையாக கவனம் செலுத்த வேண்டியிருந்தது. இதனால் ஏனைய நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாத நிலை ஏற்பட்டது.

இக்காலத்தில் போதைப்பொருள் மற்றும் பாதாள உலக செயற்பாடுகள் நாட்டில் அதிகரித்திருந்தன. பாதாள உலகத்தையும் போதைப்பொருளையும் படிப்படியாக கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

பொலிஸ் திணைக்களத்தில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் காணப்படுகிறது. பொருளாதார நெருக்கடி காரணமாக நிரப்பப்படாதிருந்த இந்த வெற்றிடங்களை படிப்படியாக நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு 2,000 பொலிஸாரை சேவைக்கு நியமித்துள்ளோம். அடுத்த ஆண்டு 5,000 பொலிஸாரை நியமிக்க திட்டமிட்டுள்ளோம்-என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.11.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# ஆஸிக்கு எதிரான ரி-20; இந்தியா த்ரில் வெற்றி!




விசாகப்பட்டினம், நவ. 25

அவுஸ்திரேலியா அணிக்கு எதிரான ரி -20 ஆட்டத்தில் இந்திய அணி 2 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தியா - அவுஸ்திரேலியா அணிகள் இடையிலான 5 ஆட்டங்கள் கொண்ட ரி -20 கிரிக்கெட் தொடரின் முதல் ஆட்டம் நேற்று முன்தினம் இரவு 7 மணிக்கு விசாகப்பட்டினத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய கேப்டன் சூர்யகுமார் யாதவ் பந்து வீச்சைத் தெரிவு செய்தார். அவுஸ்திரேலியா அணிக்கு தொடக்க வீரராக களமிறங்கிய மத்தியூ ஷோர்ட் 13 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். எனினும், மற்றோர் ஆரம்ப வீரரான ஸ்டீவ் ஸ்மித் பொறுப்பாக விளையாடி 52 ஓட்டங்களை குவித்தார். அதேநேரம் மூன்றாவது வீரராக இறங்கிய ஜோஷ் இங்கிலிஷ் இந்திய பந்துவீச்சை பதம் பார்த்தார். நாலாபுறமும் பந்துகளை பறக்கவிட்ட இங்கிலிஷ் சதம் அடித்து அசத்தினார். 50 பந்துகளில் 11 பௌண்ட்ரிகள், 8 சிக்ஸர்கள் உடன் 110 ஓட்டங்களை குவித்து அவர் ஆட்டமிழந்தார்.

ஜோஷ் இங்கிலிஷின் சதத்தின் உதவியால் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் அவுஸ்திரேலிய அணி 3 விக்கெட் இழப்புக்கு 208 ஓட்டங்கள் குவித்தது. இந்திய அணி தரப்பில் பிரசித் கிருஷ்ணா மற்றும் ரவி பிஷ்னோய் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

209 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணிக்கு தொடக்கமே அதிர்ச்சியாக அமைந்தது. யஷஸ்வி ஜெய்ஸ்வால் மற்றும் ருதுராஜ் தொடக்க வீரர்களாகக் களம்கண்ட நிலையில், முதல் ஓவரிலேயே ருதுராஜ் ரன் அவுட் ஆனார். மறுமுனையில் இருந்த ஜெய்ஸ்வால் அதிரடியாக விளையாடி 21 ஓட்டங்கள் குவித்தாலும் 3ஆவது ஓவரிலேயே விக்கெட்டை பறிகொடுத்து வெளியேறினார்.

இதன்பின் இஷான் கிஷனுடன் இணைந்து சூர்யகுமார் யாதவ் பொறுப்புடன் விளையாடினார். இருவருமே பௌண்ட்ரி மற்றும் சிக்ஸர்களை விளாசி ஓட்டக் குவிப்பை வேகப்படுத்தினர். இருவருமே விரைவாக அரைச்சதம் கடந்தனர். பின்னர் 58 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் இஷான் கிஷன் ஆட்டமிழந்தார்.

சிறப்பாக விளையாடிய சூர்யகுமார் யாதவ் 80 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். எனினும், ரிங்கு சிங் சிறப்பாக விளையாடி அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார். கடைசி பந்தில் சிக்ஸ் அடித்து வெற்றியை தேடித்தந்தார். 8 விக்கெட் இழப்புக்கு 209 ஓட்டங்கள் எடுத்தது இந்திய அணி.

அவுஸ்திரேலிய தரப்பில் அதிகபட்சமாக தன்வீர் ஷங்கா 2 விக்கெட்களை வீழ்த்தினார். (ஐ)

# 2024 ஐ. பி. எல். தொடரில் ஸ்ரோக்ஸ் ஆடமாட்டார்!

சென்னை, நவ. 25

2024ஆம் ஆண்டு நடைபெற உள்ள ஐ. பி. எல். இருபது - 20 தொடரில் பென் ஸ்ரோக்ஸ் விளையாட மாட்டார் என்று சென்னை சுப்பர் கிங்ஸ் அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

பணிச்சுமை மற்றும் உடல்தகுதியின்மை காரணமாக பென் ஸ்ரோக்ஸ் இந்தத் தொடரில் இருந்து விலகியுள்ளார். அவரின் இந்த முடிவுக்கு அணி நிர்வாகம் ஆதரவாக இருப்பதாக சென்னை அணி நிர்வாகம் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளது.

கடந்த ஆண்டு நடைபெற்ற ஐ. பி. எல். 2023 ஏலத்தில் பென் ஸ்ரோக்ஸ் அதிக தொகைக்கு ஏலம் எடுக்கப்பட்டார். சென்னை சுப்பர் கிங்ஸ் அணி பென் ஸ்ரோக்ஸை 16.25 கோடி (இந்திய) ரூபாய்க்கு ஏலத்தில் எடுத்தது. எனினும், கடந்த ஆண்டு ஐ. பி. எல். தொடரில் சென்னை அணிக்காக வெறும் 2 போட்டிகளில் மட்டுமே



பென் ஸ்ரோக்ஸ் விளையாடினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# டேவிஸ் கிண்ண ரென்னிஸ் அரையிறுதியில் ஆஸி. அணி

மலாகா, நவ. 25

டேவிஸ் கிண்ண ரென்னிஸ் தொடரின் காலிறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியா 2-1 என்ற கணக்கில் செக் குடியரசை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது.

ஸ்பெயின் நாட்டின் மலாகா நகரில் நடைபெற்ற இந்த மோதலில் முதலில் நடைபெற்ற ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் செக்குடியரசின் தோமஸ் மச்சாக், அவுஸ்திரேலியாவின் ஜோர்தன் தோம்சனை எதிர்கொண்டார்.




இதில் தோமஸ் மச்சாக் 6-4, 7-5 என்ற நேர் செற்றில் வெற்றி பெற்றார். இதனால் செக்குடியரசு 1-0 என முன்னிலை பெற்றது. 2ஆவது நடைபெற்ற ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் அவுஸ்திரேலியா பதிலடி கொடுத்தது.

அந்த அணியின் வீரர் அலெக்ஸ் டி மினார் 4-6, 7-6 (7-2), 7-5 என்ற செற் கணக்கில் போராடி செக்குடியரசின் ஜிரி லெஹெக்காவை தோற்கடித்தார். இதனால் ஆட்டம் 1-1 என சமநிலையை அடைந்தது. கடைசியாக நடைபெற்ற இரட்டையர் பிரிவு ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவின் மத்தியூ எப்டன், மக்ஸ் புர்செல் ஜோடியானது செக்குடியரசின் ஜாகுப் மென்சிக், அடம் பாவ்லாசெக் இணையை எதிர்கொண்டது.

இதில் மத்தியூ எப்டன், மக்ஸ் புர்செல் ஜோடி 6-4, 7-5 என்ற நேர் செற்றில் வெற்றி பெற்றது. முடிவில் அவுஸ்திரேலியா 2-1 என்ற கணக்கில் செக் குடியரசை வீழ்த்தி அரையிறுதி சுற்றுக்கு முன்னேறியது. (ஐ)

## உலகக் கிண்ண தகுதி சுற்று

# பிரேஸிலை வீழ்த்தியது ஆர்ஜென்ரீனா அணி!

ரியோ டி ஜெனிரோ, நவ. 25

2026ஆம் ஆண்டு உலகக் கிண்ண உதைபந்தாட்ட தொடருக்கான தகுதி சுற்று போட்டிகள் உலகின் பல்வேறு நாடுகளில் நடைபெற்று வருகின்றன.

இதில் தென்னமெரிக்க பிராந்தியத்தை சேர்ந்த அணிகளுக்கான தகுதி சுற்றில் பிரேசில் - ஆர்ஜென்ரீனா அணிகள் மோதின.

லயோனல் மெஸ்ஸி, பிரேசில் மண்ணில் விளையாடும் கடைசிப் போட்டியாக இது இருக்கக்கூடும் என்பதால் இந்த ஆட்டத்தை காண பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் மைதானத்தில் குவிந்திருந்தனர். போட்டி தொடங்குவதற்கு முன்னதாக மைதான கேலரியில் இருநாட்டு ரசிகர்கள் இடையே மோதல் ஏற்பட்டது.

இதனால் லயோனல் மெஸ்ஸி தலைமையிலான ஆர்ஜென்ரீனா அணி வீரர்கள் மைதானகேலரி அருகே



விரைந்து சென்று மோதலை நிறுத்துமாறு ரசிகர்களை கோரினர். ஆனால், மோதல் நிற்காததால் வீரர்கள் ஆட்டக்களத்தில் இருந்து வெளியேறினர். சுமார் 30 நிமிடங்களுக்குப் பிறகு ஆட்டம் மீண்டும் தொடர்ந்தது. முதல் பாதியில் இரு அணிகள் தரப்பில் கோல் ஏதும் அடிக்கப்படவில்லை.

63ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்ரீனாவின் நிக்கோலஸ் ஓட்டமெண்டி கோல் அடித்து அசத்தினார். இதனால் ஆர்ஜென்ரீனா 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.

பிரேசில் அணி கடைசி வரை போராடியும் கோல் ஏதும் அடிக்க முடியவில்லை. இதனால் ஆர்ஜென்ரீனா 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஆர்ஜென்ரீனா அணிக்கு இது 5ஆவது வெற்றியாக அமைந்தது. அந்த அணி 6 ஆட்டங்களில் விளையாடி ஒரு தோல்வி, 5 வெற்றிகளுடன் 15 புள்ளிகள் குவித்து 10 அணிகள் பங்கேற்றுள்ள தென் அமெரிக்க கண்டங்களைச் சேர்ந்த நாடுகளுக்ககான தகுதி சுற்றில் முதலிடம் வகிக்கிறது. 3ஆவது தோல்வியை சந்தித்துள்ள பிரேசில் 7 புள்ளிகளுடன் 6ஆவது இடத்தில் உள்ளது.

2026ஆம் ஆண்டு உலகக் கிண்ண உதைபந்து தொடர் அமெரிக்கா, மெக்சிக்கோ, கனடாவில் நடைபெறுகிறது. இதில் 48 அணிகள் கலந்துகொள்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அமெரிக்காவில் காலிஸ்தான் ஆதரவாளரை கொல்ல இந்தியா சதித் திட்டம் தீட்டியதாக குற்றச்சாட்டு



அமெரிக்காவில் வாழும் காலிஸ்தான் ஆதரவாளர் ஒருவரைக் கொலை செய்ய இந்தியா சதித்திட்டம் தீட்டியதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதற்கு இந்தியா பதிலளித்துள்ளது.

"குற்றவாளிகள் மற்றும் பயங்கரவாதிகள் உட்பட சிலரைப் பற்றிய தகவல்களை அமெரிக்கா பகிர்ந்திருக்கிறது. இதுபற்றி விசாரணை நடந்து வருகிறது" என்று இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, பிரிட்டிஷ் செய்தித்தாளான 'பைனான்சியல் டைம்ஸ்' ஆதாரங்களை மேற்கோள் காட்டி ஒரு செய்தியறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில், அமெரிக்காவில் வாழும் ஒரு காலிஸ்தான் ஆதரவு சீக்கியரை கொலை செய்வதற்கு இந்தியா சதித்திட்டம் தீட்டியதாகவும், அதை அமெரிக்கா முறியடித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சதியில் இந்திய அரசின் தொடர்பு இருப்பதாகவும் அதில் குறிப்பிட்டிருந்தது.

இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் இன்னும் அமெரிக்காவால் அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்தப்படவில்லை.

செய்தியறிக்கையின்படி, இந்த சதித் திட்டத்தின் இலக்கு குர்பத்வந்த் சிங் பன்னு. இவர் சீக்கிய தனி நாடான காலிஸ்தானை கோரும் பிரிவினைவாதி. காலிஸ்தானை உருவாக்கும் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ள 'நீதிக்கான சீக்கியர்கள்' அமைப்பின் வழக்கறிஞர். அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய இரு நாடுகளின் குடியுரிமையும் வைத்திருக்கிறார்.

இவர் 2020ஆம் ஆண்டு இந்தியாவால் "பயங்கரவாதி" என்று அறிவிக்கப்பட்டார்.

இந்த ஆண்டு ஜூன் மாதம், காலிஸ்தான் ஆதரவாளரான ஹர்தீப் சிங் நிஜ்ஜார், கனடாவின் வான்கூவரில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

செப்டம்பர் மாதம், கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, நிஜ்ஜார் கொலையில் இந்தியாவின் தொடர்பு குறித்து 'நம்பகமான குற்றச்சாட்டுகள்' இருப்பதாகக் கூறியிருந்தார்.

இந்தியா இந்தக் குற்றச்சாட்டுகளை 'ஆதாரமற்றது, அபத்தமானது' என்று கூறியிருந்தது. இருப்பினும், இந்த முறை, அமெரிக்காவில் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் சதித்திட்டம் குறித்துக் கூறப்படும் செய்திகள் தொடர்பாக விசாரணை நடத்தப் போவதாக இந்தியா கூறியுள்ளது.

**இந்தியா மீது என்ன குற்றச்சாட்டு?**

பைனான்சியல் டைம்ஸ் செய்தித்தாள் அறிக்கை பின்வருமாறு கூறுகிறது.

கடந்த ஜூன் மாதம் கனடாவில் காலிஸ்தான் ஆதரவாளரான ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்டார். அதன் பிறகு, பன்னுவை கொல்ல நடந்த சதித் திட்டம் பற்றிய தகவல்களை அமெரிக்கா தனது நட்பு நாடுகளுடன் பகிர்ந்துகொண்டது.

ஜூன் மாதம் இந்திய பிரதமர் நரேந்திர மோடி வாஷிங்டனுக்கு பயணம் செய்த பிறகு, இது தொடர்பாக அமெரிக்கா தனது எதிர்ப்பைத் தெரிவித்திருந்தது.

அமெரிக்கா, ராஜ்ஜீய மட்டத்தில் இந்தியாவை எச்சரித்தது. மேலும் சதித் திட்டம் தீட்டியதாகக் கூறப்படும் ஒருவர் மீது நியூயார்க் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டிருக்கிறது, என்று அந்த செய்தித்தாள் ஒரு அதிகாரியை மேற்கோள் காட்டி எழுதியுள்ளது.

தற்போது, இந்த வழக்கை பகிரங்கப் படுத்த வேண்டுமா அல்லது நிஜ்ஜாரின் மரணம் தொடர்பான விசாரணையை கனடா முடிக்கும் வரை காத்திருக்க வேண்டுமா என்பது குறித்து அமெரிக்க நீதித்துறை விவாதித்து வருவதாகவும் அந்தச் செய்தியறிக்கை கூறுகிறது.

வான்கூவரில் நிஜ்ஜார் கொல்லப்பட்டது தொடர்பாக கனேடிய அதிபர் ட்ரூடோ குற்றச்சாட்டுகளை முன்வைத்த போது, அமெரிக்கா இது பற்றிய விரிவான தகவல்களை அதன் நட்பு நாடுகளுடன் பகிர்ந்துகொண்டது. இந்த வழக்குகளின் ஒரே மாதிரியான வடிவம் குறித்து இந்த நாடுகள் கவலை தெரிவித்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

பைனான்சியல் டைம்ஸ் செய்தித்தாள் அறிக்கையின்படி, அமெரிக்க நீதித்துறை மற்றும் எப்.பி.ஐ இந்த விஷயத்தில் கருத்து தெரிவிக்க மறுத்துவிட்டன.

அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்பு கவுன்சிலும் கருத்து தெரிவிக்க மறுத்து விட்டது. அதோடு "சட்ட விஷயங்கள்" மற்றும் "ரகசிய இராஜதந்திர தகவல்தொடர்புகள்" குறித்து பகிரங்கமாக கருத்து தெரிவிப்பதில்லை என்றும் கூறியது.




இந்தியா ஆட்சேபனை தெரிவித்த பிறகு சதித்திட்டம் தீட்டியவர்கள் தங்கள் திட்டங்களை மாற்றிக் கொண்டார்களா, அல்லது எப்.பி.ஐ தலையிட்டு சதித்திட்டத்தை முறியடித்ததா என்பதை இந்த விஷயத்தைப் பற்றி அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கவில்லை என்றும் பைனான்சியல் டைம்ஸ் செய்தியறிக்கை கூறுகிறது.



**யார் இந்த குர்பத்வந்த் சிங் பன்னு?**

குர்பத்வந்த் சிங் பன்னு காலிஸ்தான் ஆதரவாளரான அமெரிக்க வழக்கறிஞர். அவரது வயது 40 முதல் 50 வயது வரை இருக்கலாம்.

இவர் அமிர்தசரஸ் அருகே உள்ள கான்கோட் கிராமத்தைச் சேர்ந்தவர். அவரது தந்தை மகிந்தர் சிங் பஞ்சாப் மாநில வேளாண் சந்தைப்படுத்தல் வாரியத்தில் பணிபுரிந்தவர்.

பன்னு 1990களில் பஞ்சாப் பல்கலைக் கழகத்தில் சட்டம் பயின்றார். இப்போது அமெரிக்காவில் வழக்கறிஞராக உள்ளார். கனடாவில் காலிஸ்தான் சார்பு நிகழ்வுகள் மற்றும் ஆர்ப்பாட்டங்களில் அவர் அடிக்கடி காணப்படுகிறார்.

நியூயார்க்கில் இருந்து இயங்கும் காலிஸ்தான் சார்பு அமைப்பான 'நீதிக்கான சீக்கியர்களின்' நிறுவனர் மற்றும் தலைவராகவும் இவர் அறியப்படுகிறார்.

பைனான்சியல் டைம்ஸ் அறிக்கையின்படி, அவரைப் படுகொலை செய்வதற்கான சதித்திட்டம் குறித்து அமெரிக்க நிர்வாகம் அவருக்குத் தெரிவித்ததா இல்லையா என்பதைக் கூற பன்னு மறுத்து விட்டார். அவர், "அமெரிக்க மண்ணில் இந்திய ஏஜெண்டுகளால் என் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டதா என்பதை அமெரிக்க அரசு தெளிவுபடுத்தட்டும்," என்றார்.

பன்னு மேலும், 'அமெரிக்க மண்ணில் அமெரிக்கக் குடிமக்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தல் அமெரிக்காவின் இறையாண்மைக்கு ஏற்பட்ட அச்சுறுத்தலாகும். பைடன் நிர்வாகம் இதுபோன்ற சவால்களைச் சமாளிக்கும் திறன் கொண்டது என்று நான் நம்புகிறேன்," என்றார்.

கடந்த வாரம், பன்னு, ஏர் இந்தியா விமானங்களில் பயணம் செய்ய வேண்டாம் என்று சீக்கியர்களுக்கு எச்சரித்திருந்தார். அவ்வாறு செய்வது 'உயிருக்கு ஆபத்தானது' என்றும் கூறியிருந்தார்.

இது தொடர்பாக, இந்தியாவில் உள்ள தேசியப் புலனாய்வு முகமை பன்னு மீது ஒரு எப்.ஐ.ஆர் பதிவு செய்துள்ளது.

**இந்தியாவின் பதில் என்ன?**

பைனான்சியல் டைம்ஸ் வெளியிட்டிருக்கும் செய்தி குறித்து இந்திய வெளியுறவு அமைச்சகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், 'சமீபத்தில், இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் நடந்த பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்த பேச்சுவார்த்தையின் போது, குழுவாகச் செயல்படும் குற்றவாளிகள், சட்டவிரோத துப்பாக்கி வியாபாரிகள், பயங்கரவாதிகள், மற்றும் பலர் குறித்து அமெரிக்கா கவலை தெரிவித்தது,' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும், "இந்தத் தகவல் இரு நாடுகளுக்கும் கவலையளிக்கும் விஷயம். இது குறித்துத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அவர்கள் முடிவு செய்துள்ளனர்," என்று அந்த அறிக்கை கூறுகிறது.

மேலும், இது இந்தியாவின் தேசப் பாதுகாப்பையும் பாதிப்பதாகவும், அதனால் இந்தியா இதைத் தீவிரமாக விசாரித்து வருவதாகவும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது. மேலும், அமெரிக்கா வழங்கிய தகவல்களை சம்பந்தப்பட்ட துறைகள் விசாரித்து வருவதாகத் தெரிவித்திருக்கிறது.




# இலங்கையின் தலைவர்கள் நல்லாட்சி நியதிகளில் இருந்து விலகிச்சென்றதை வெளிக்காட்டும் உயர்நீதிமன்ற தீர்ப்புகள்



கலாநிதி ஜெகான் பெரேரா

அரசாங்கத்தின் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட இரு கிளைகளுக்கும் நியாயப்பாடு இருக்கும் நிலையில் அல்லது முற்றாகவே நியாயப்பாடு இல்லாதிருக்கும் ஒரு நேரத்தில், மக்களால் தெரிவுசெய்யப்படாத கிளை நியாயப்பாட்டை பெற்றுவருகிறது. அரசாங்கம் பிரதானமாக ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் அறகலய மக்கள் கிளர்ச்சிக்கு மத்தியில் பதவியில் இருந்து இறங்க நிர்ப்பந்திக்கப்பட்டவர்களினால் அமைக்கப்பட்ட காரணத்தினால் பெருமளவுக்கு அதன் நியாயப்பாட்டை இழந்துவிட்டது.



அண்மைய வழக்குகளில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகள் மிகவும் போற்றத்தக்கவை. சமூக ஊடகங்களை கட்டுப்படுத்துவது தொடர்பிலான இணையவெளி பாதுகாப்பு சட்டமூலம் தொடர்பான வழக்கின் தீர்ப்பு, தீவிர மதவாத கோட்பாடுகளில் இருந்து ஆட்களை விடுவிப்பதற்கான 2021 ஆம் ஆண்டின் ஒழுங்குவிதி (இது சந்தேகநபர்களை நீதிமன்ற விசாரணையின்றி கட்டாய புனர்வாழ்வுக்கு அனுப்புவதற்கு அனுமதித்திருக்கக் கூடியது), மற்றும் வெறுப்புப்பேச்சுக்காக ராசிக் முஹம்மட் றம்சியை கைதுசெய்தமை சட்டவிரோதமானது என்று வழங்கப்பட்ட தீர்ப்பு ஆகியவை மக்களின் ஜனநாயக உரிமைகளின் பக்கம் நீதிமன்றம் உறுதியாக நிற்கிறது என்பதை காட்டுகிறது.

இரு வருடங்களுக்கு முன்னர் பொருளாதார வீழ்ச்சிக்கு பொறுப்பானவர்களுக்கு எதிராக உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு முன்னோடியான ஒன்றாகும். 2019 - 2022 காலப்பகுதியில் பொருளாதாரத்தை தவறாக முகாமை செய்ததன் மூலம் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச மற்றும் முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ச உட்பட ஒரு குழுவினர் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறியதாக நீதிமன்றம் கூறியது.

பொருளாதாரத்தை அவர்கள் முகாமை செய்த முறையின் மூலமாக பொருளாதார நெருக்கடிக்கு வழிவகுத்து மக்கள் வைத்திருந்த நம்பிக்கையையும் அரசியலமைப்பையும் மீறியதாக நீதிமன்றம் கூறியது. ஆனால், குற்றவாளிகளாகக் காணப்பட்டவர்களுக்கு முன்னுதாரணமாக அமையக்கூடிய தண்டனையை வழங்கும் அளவுக்கு நீதிமன்றம் செல்லவில்லை. அதனால் இது குற்றவாளிகளின் குடியியல் உரிமைகள் பறிக்கப்பட்டு அவர்களுக்கு நிதியியல் தண்டனைகளும் வழங்கப்படவேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கோருவதற்கு வழிவகுத்திருக்கிறது.

ஆனால், உயர்நீதிமன்றத்தினால் வெளிக்காட்டப்பட்ட முற்போக்கான சிந்தனை அரசாங்கத்தின் ஏனைய இரு கிளைகளினாலும் வெளிக்காட்டப்படவில்லை என்பது துரதிர்ஷ்டவசமானது. அறகலய போராட்ட இயக்கத்தினர் வேண்டிநின்ற 'முறைமை மாற்றம்" எதுவும் ஏற்படவில்லை. நாட்டின் சகல பாகங்களிலும் இருந்து அணிதிரண்டுவந்து அறகலயவுக்கு தார்மீக ஆதரவை வழங்கிய மக்களின் அபிலாசையும் முறைமை மாற்றமாகவே இருந்தது.

மாற்றத்துக்கு பதிலாக முன்னைய போக்கையை கூடுதலாகக் காணக்கூடியதாக இருக்கிறது. போராட்ட இயக்கத்தில் இருந்து வசதிபடைத்த உயர் வர்க்கத்தினரையும் வர்த்தக சமூகத்தினரையும் வெற்றிகரமாக அரசாங்கம் பிரித்துவிட்டமையே ஏற்பட்டிருக்கும் மாற்றமாகும். வர்த்தக சம்மேளனத்தின் ஆதரவைப் பெற்றிருக்கும் அண்மைய பட்ஜெட் பிரித்தாளும் கொள்கைக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது.

### ஒப்புரவற்ற வரி அறவீட்டு முறை

பெறுமதிசேர் வரியை 15 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாக அதிகரித்தமையும் தனவந்தர்களினாலும் வறியவர்களினாலும் கொள்வனவு செய்யப்படுகின்ற அனேகமாக சகல பாவனைப் பொருட்களுக்கும் ஒத்தமுறையில் அந்த வரி அதிகரிப்பின் பிரயோகமும் பொருளாதாரப் படிநிலையில் உச்சத்தில் இருப்பவர்களை விடவும் அடிமட்டத்தில் இருக்கின்றவர்களையே மிகவும் கடுமையாகப் பாதிக்கும். 2022 ஆம் ஆண்டில் சனத்தொகையின் சகல பிரிவுகளும் எரிபொருட்களைப் பெறுவதற்காக நீண்ட வரிசைகளில் இரவுபகலாக கால்கடுக்க நின்று அனுபவித்த அவலமும் மின்வெட்டினால் ஏற்பட்ட பாதிப்பும் ஒரு ஐக்கிய உணர்வுக்கு வழிவகுத்தது.

கொழும்பு காலிமுகத்திடலிலும் நாட்டின் ஏனைய பாகங்களிலும் தனவந்தர்கள், நடுத்தர வர்க்கத்தினர் மற்றும் வறியவர்கள் என்று வேறுபட்ட பொருளாதாரப் பின்னணியைக் கொண்டவர்கள் அருகருகாக நின்று இடர்நிலையை அனுபவித்தார்கள். ஆனால் இன்று பொருளாதாரச் சவால்கள் எல்லோரினாலும் பொதுவில் பகிர்ந்து கொள்ளப்படுபவையாக இல்லை.

தற்போது பொருளாதாரப் படிநிலையின் கீழ் அரைவாசியில் இருப்பவர்களையே பிரதானமாக இடர்பாடுகள் பாதிக்கின்றன. கூட்டு ஒருமைப்பாட்டு உணர்வு இல்லாமல் போய்விட்டது. உயர்மட்டத்தில் உள்ளவர்களினால் நிலைவரத்தை சமாளிக்கக்கூடியதாக இருக்கின்ற அதேவேளை சனத்தொகையில் அரைவாசி எந்தவிதமான நம்பிக்கையும் இல்லாமல் இடர்பாடுகளுடன் அல்லற்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

பொதுநன்மைக்கு முதல்நிலையைக் கொடுக்கும் நோக்குடன் அரசாங்கத்தின் கொள்கைச் சீர்திருத்தங்கள்



முன்னெடுக்கப் படாதமையே பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டுவருவதற்கான அதன் அணுகுமுறையில் உள்ள அடிப்படைப் பிரச்சினையாகும். இதை அரசாங்கத்தின் வருவாயை அதிகரிப்பதில் கவனம் செலுத்தும் வரிக்கொள்கை விடயத்தை விடவும் வேறு எதிலும் தெளிவாகக் காணமுடியாது.

நேரடி வரிகளை விடவும் மறைமுக வரிகளில் அதீதமாக தங்கியிருக்கின்றமையும் மூலதனத்தை விடவும் தொழிலாளர் மீது வரி அறவிடுவதற்கு முன்னுரிமை கொடுப்பதுமே பொருளாதார சீர்திருத்தத்தில் இலங்கையின் குறைபாடுகளின் முதலாவது குறிகாட்டி என்று ஜனாதிபதியின் ஆலோசகரும் சர்வதேச நாணய நிதியத்தின் முன்னாள் பணிப்பாளருமான கலாநிதி ஷார்மினி குரே கூறுகிறார்.

மூலதன வருமானம் பிரதானமாக தனவந்தர்களின் வளங்களை பெருக்குகின்ற அதேவேளை, மறைமுக வரிகள் தங்களது வருவாயின் பெரும்பகுதியை பொருட்களுக்கும் சேவைகளுக்கும் செலவிடும் வறியவர்கள் மீதே வரிச்சுமையை ஏற்றுவதால் பொருளாதாரச் சீர்திருத்தத்தின் மேற்குறிப்பிட்ட இரு குறைபாடுகளும் நேர்மைக் கோட்பாட்டை மீறுவதாக அமைகின்றன என்று என்று அவர் இலங்கை மத்திய வங்கியின் 73 வது வருடாந்த சொற்பொழிவை நிகழ்த்தியபோது குறிப்பிட்டார்.

கணிசமான அளவில் வரி விடுமுறைகள் வழங்கப்படுவதிலும் வரிக் கோட்பாடுகள் மீறப்படுவதை காணக்கூடியதாக இருக்கிறது. 2022 அக்டோபர் வரி சீர்திருத்தத்தை அடுத்து பெரும்பாலான கம்பனிகள் ஒரு சராசரியான கோர்ப்பரேட் வரி வீதத்திற்கு இப்போது உட்படுத்தப்படுகின்றன. ஆனால் விரும்பப்படும் செயற்திட்டங்கள் மூலோபாய அபிவிருத்தி செயற்திட்டங்கள் சட்டத்தின் கீழ் பரந்தளவிலான வரி விலக்கீடுகளை தொடர்ந்து பெறுகின்றன.

தெளிவில்லாததாக அமைந்திருக்கும் பிரமாணங்களின் அடிப்படையில், செயற்திட்டங்கள் கோர்ப்பரேட் வரி, தனிப்பட்ட வரி, பெறுமதிசேர் வரி, கலால் வரி மற்றும் சுங்கவரி உட்பட எட்டு வேறுபட்ட வரிச் சட்டங்களில் இருந்து இருபத்தைந்து வருடங்களுக்கு வரி விலக்கீடுகளை பேச்சுவார்த்தை நடத்தி பெற்றுக்கொள்ளமுடியும்.

வரி விலக்கீடுகள் பிரதானமாக வெறுமனே தனவந்தர்களாக மாத்திரமல்ல மீமிகையான தனவந்தர்களாகவும் (Super Rich) இருக்கும் கோர்ப்பரேட் நிறுவனங்களின் பங்குதாரர்களுக்கே பயனளிப்பவையாக இருப்பதை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது இலங்கை அஸ்வேசும போன்ற திட்டங்களின் மூலமாக வறியவர்களுக்கு வழங்கும் சிறிய கொடுப்பனவுகளை விடவும் தனவந்தர்களுக்கும் மீமிகையான தனவந்தர்களுக்குமே இயல்பாகவே கூடுதல் நன்மைகளைச் செய்கிறது.

### அரசின் பொறுப்பு

சகலருக்கும் இலவசக் கல்வி, சகலருக்கும் இலவச சுகாதார சேவை என்று நாட்டின் தாபகத் தலைவர்களினால் முன்னெடுக்கப்பட்ட நீண்டகாலக் கொள்கையை கைவிடுவதற்கு அரசாங்கம் திட்டமிடுகிறது என்பதை அரசாங்கத் தலைவர்களின் அண்மைய அறிவிப்புக்கள் உணர்த்துகின்றன.

பொருளாதாரப் படிநிலையில் எந்த இடத்தில் இருக்கிறார்கள் என்பதைப் பொருட்படுத்தாமல் சகல மக்களுக்கும் அடிப்படைத் தேவைகளை வழங்குவதற்கு செய்யப்பட்ட ஏற்பாடு புதிய சுதந்திர நாட்டின் தலைவர்கள் அதன் குடிமக்களுக்கு செய்த ஆசீர்வாதமாகும். மலையக பெருந்தோட்டங்களில் வாழும் மக்களுக்கு செய்த அநீதியே ஒரு கொடூரமான விதிவிலக்காகும். அதன் மரபு இன்னமும் கூட ஓயாது நினைவில் ஊடாடுகிறது.

பின்தங்கிய குடும்ப பின்னணிகளில் பிறந்தவர்களுக்கு சமூக அசைவியக்கத்துக்கான வாயிலைத் திறந்துவிட்ட இலவச கல்வியும் இலவச சுகாதார சேவையும் ஊழலினாலும் குறைந்தளவு நிதியொதுக் கீடுகளினாலும் இப்போது மீட்டெடுக்கமுடியாத அளவுக்கு ஆபத்துக்குள்ளாகின்றன.

கட்டுப்படியாகக்கூடியவர்களுக்கு தனியார் வைத்தியசாலையையும் தனியார் பல்கலைக் கழகங்களையும் வழங்குவது ஏற்றுக் கொள்ளக்கூடியதே. ஆனால் வசதி குறைந்தவர்களுக்கு பயன்தருகின்ற அரசாங்க வைத்தியசாலைகளையும் பல்கலைக் கழகங்களையும் படிப்படியாக செயலிழக்கச் செய்வதை எந்த விதத்திலும் ஏற்றுக் கொள்ளமுடியாது.

பணம் அறவிடும் தனியார் கல்வி நிறுவனங்களில் இணைவதற்கு வசதியாக மாணவர்களுக்கு பண மானியத்தை அல்லது வவுச்சரை வழங்கும் திட்டம் குறித்து அரசாங்கம் ஆராய்வதாக அண்மையில் உயர்வர்க்க தனியார் சர்வதேச பாடசாலை ஒன்றின் வைபவத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

பெரும்பாலான தனியார் கல்வி நிறுவனங்கள் பெருந்தன்மையான நோக்கங்களுக்காகவோ அல்லது பொதுநன்மைக்கான நோக்கங்களுக்காகவோ அல்ல, தனியாரின் இலாப நோக்கங்களுக்காகவே நடத்தப்படுகின்றன.

பின்தங்கிய குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மாணவனோ அல்வது பொருளாதார ரீதியில் வறிய குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மாணவனோ அரசாங்கத்தின் மானியத்தை அல்லது வவுச்சரை பெற்றுக்கொண்டு பணம் அறவிடும் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் இணைவதற்கு மிகுதிப் பணத்தைச் செலுத்தக்கூடிய நிலையில் இல்லை.

சகலருக்கும் இலவச கல்வியின் மூலமாக தனது பாடசாலைக் காலத்தில் இருந்து பல்கலைக்கழகம் வரை பயனடைந்தவர் ஜனாதிபதி விக்கிரமசிங்க. அரசாங்க கல்வி நிறுனங்கள் மூலமாக தரமுயர்ந்த கல்வியை வழங்கும் பொறுப்பை அரசாங்கம் தட்டிக்கழிக்கக்கூடாது. அரசாங்க கல்வி நிறுவனங்கள் மூலமாக ஜனாதிபதியும் ஏனையவர்களும் பெற்ற அந்த தரமான கல்வியே அவர்களை அரசியலிலும் கல்வி மற்றும் பொருளாதாரத்திலும் சர்வதேச மட்டத்தில் போட்டியிடக்கூடியவர்களாக வளர்த்து என்பதை அவர்கள் மறந்துவிடக்கூடாது.

பொது நன்மையை உறுதிப்படுத்துவதற்கு ஒழுங்கு விதிகளையும் உட்கட்டமைப்புக்களையும் வழங்குவதற்கு அரசாங்கத்துறை அவசியம். சமூக நலன்புரி சேவைகள் மீதான பற்றுறுதியும் அவசியம். அரசினால் வழங்கப்படுகின்ற இலவச கல்வி மற்றும் சுகாதார சேவைக்கு வகைமாதிரிகளாக பல நாடுகள் விங்குகின்றன. அவற்றில் இலங்கை ஒன்று. ஆனால் இந்த அந்தஸ்து இப்போது கேள்விக்குள்ளாகியிருக்கிறது.

தனியார்துறைக்கு மேலும் மேலும் அதிகாரங்களையும் பொறுப்புக்களையும் கொடுப்பது நாட்டினதும் அதன் மக்களினதும் முழுமையான அபிவிருத்தியை உறுதிசெய்வதற்கான அரசின் பொறுப்பை துறப்பதற்கு சமமானதாகும்.

இன்றைய அரசாங்க தலைவர்களும் வரவிருக்கும் தலைவர்களும் உச்சபட்ச அக்கறையுடனும் நேர்மையுடனும் பொதுநன்மைக்காக பாடுபடும் தங்களது பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டியது அவசியமாகும்.

அரசாங்கம் சம்பந்தப்பட்ட அண்மைய சகல வழக்குகளிலும் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கள் நல்லாட்சி மற்றும் தார்மீகப் பொறுப்புக் கோட்பாடுகளில் இருந்து இலங்கையின் தலைவர்கள் எந்தளவுக்கு விலகிச் சென்றிருக்கிறார்கள் என்பதை தெளிவாகக் காட்டுகின்றன.